Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, FEBRUARY 18 2025

செவ்வாய்க்கிழமை 18, பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர் 161   நகரப்பதிப்பு★   FREE



## ஜனாதிபதி அனுரவின் நகைச்சுவை பதில்கள்

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, நிதியமைச்சர் என்றவகையில், 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தை, பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (17) சமர்ப்பித்து உரையாற்றினார். அவரை, அவ்வப்போது சில நகைச்சுவையை கூறினார்.

தொடர்ச்சி P2





## "கத்தியால் பால் கறக்க முயற்சி"

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டமானது கத்தியால் பால் கறக்க முயற்சிக்கும் வரவு -செலவுத் திட்டம் என்று முன்னணி சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2



## இராதாவுக்கு "மகிழ்ச்சி"

மலையகத் தமிழர்கள் என்று குறிப்பிட்டமை 'மகிழ்ச்சி' எனினும் பெருந்தோட்ட மக்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் வரவு-செலவுத் திட்டத்தில் பரிந்துரைகள் மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளமை 'கவலை' என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட எம்.பி.யுமான வி.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## "விமர்சிப்பவர்களுக்கு அச்சுறுத்தல்"

தற்போதுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் அச்சுறுத்தப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## "மூடியே மறைத்து வீதி திறந்த பட்ஜெட்"



வடக்கில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை மூடி மறைத்து வடக்கின் வீதிகள் தொடர்பிலேயே வரவு- செலவுத் திட்டத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் வரவு -செலவுத் திட்ட உரை தொடர்பில் ஊடகங்களுக்கு

தொடர்ச்சி P2




முதலாவது பட்ஜெட்டில் எட்டு திசைகளையும்

# திசைக்காட்டி கவனித்தது

- அரச துறையினரின் சம்பளம் அதிகரிப்பு
- தனியர் துறையினரின் சம்பளத்தை அதிகரிக்க யோசனை
- தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் உறுதிப்படுத்தப்பட்டது
- பாடசாலை மாணவர்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்பு
- மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு அதிகரிப்பு
- கலைஞர்கள் / ஊடகவியலாளர்கற்கு வீடமைப்பு

திசைக்காட்டியைச் சின்னமாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது வரவு- செலவுத் திட்டம் நிதியமைச்சர் என்றவகையில், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் பாராளுமன்றத்தில், திங்கட்கிழமை (17) சமர்ப்பிக்கப்பட்டது.

எவ்விதமான ஆரவாரமும் இன்றி படைகல சேவிதருடன் சபைக்குள் பிரவேசித்த ஜனாதிபதி, ஒரே மூச்சில், பட்ஜெட் உரையை வாசித்து, முன்மொழிவுகளையும் சமர்ப்பித்தார்.

இந்த முன்மொழிவுகளின் அடிப்படையில், வடக்கு, கிழக்கு. மலையகம், தெற்கு மட்டுமன்றி, நாட்டின் எட்டுத்திசைகளிலும் இருக்கும் தொழிற்துறை சார்ந்தவர்களையும் கவனித்து, அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் செய்து கொடுக்கும் வகையிலான முன்மொழிவுகளை முன்வைத்துள்ளார்.

அதில், அரச துறையைச் சேர்ந்தவர்களுக்கு பெரும் சம்பள அதிகரிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. தனியார்த் துறையினருக்கு சம்பள அதிகரிப்புக்கான முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளன. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.



## "இலஞ்சம் கொடுக்க வேண்டாம்"

இன்று நான் கோடிட்டுக் காட்டிய கொள்கைகள், நான் இந்தப் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டதற்கான தொலைநோக்குப் பார்வையைப் பிரதிபலிக்கும் அதேவேளையில், நான் மட்டும் அவற்றை உருவாக்கவில்லை. இந்தக் கொள்கைகள் நம்பமுடியாத முயற்சியின் விளைவாகும் என்று தெரிவித்த ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, இலஞ்சம் கொடுக்கவேண்டாம், இலஞ்சம் வாங்குபவர்கள்தான் பயப்பட வேண்டும் என்றார்.

தொடர்ச்சி P2



மீனவர் பிரச்சினைக்கு தீர்வு இல்லையெனில்

## புதுடெல்லியில் போராட்டம் வெடிக்கும்

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைகளுக்கு இந்திய மத்திய அரசு தீர்வு காணவில்லையெனில், புதுடெல்லியில் போராட்டம் நடத்துவோம் என கனிமொழி எம்.பி. தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது, தண்டனை விதிப்பது, மீனவர்களின் விசைப் படகுகளை பறிமுதல் செய்வது உள்ளிட்ட

தொடர்ச்சி P2

## கூட்டணிகளுடன் பேச முடிவு



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் கூட்டணிக் கட்சிகளுடன் கலந்துரையாடுவதற்கு இலங்கை தமிழரசு கட்சி தீர்மானித்துள்ளதாக அந்தக் கட்சியின் பதில்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடியில் ஞாயிற்றுக்கிழமை (16) இடம்பெற்ற

தொடர்ச்சி P2

## இலங்கை தினம்

'வளமான நாடு - அழகான வாழ்க்கை' என்ற அரசாங்கக் கொள்கை வரை சட்டகம், சமூகங்களுக்கிடையேயான இடைவெளிகளைக் குறைப்பதற்கு உறுதி பூண்டுள்ள, ஒரு நல்லிணக்க இலங்கைக்கான தொலைநோக்குப் பார்வையை வெளிப்படுத்துகிறது. இணக்கம், நெறிமுறை மற்றும் நல்ல நடத்தை போன்ற குணங்களைக் கொண்ட ஒரு பண்பட்ட நபரை உருவாக்குவதற்கு வெவ்வேறு கலாச்சாரங்களைப் பயன்படுத்துவதை இது வலியுறுத்தியது.

தொடர்ச்சி P2

## 2 மணி நேரம் 45 நிமிடங்கள் உரை

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது வரவு- செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில், நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால், திங்கட்கிழமை (17) சமர்ப்பிக்கப்பட்டது. 2025ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை காலை 10.30 மணியளவில் சமர்ப்பிக்கத் தொடங்கிய ஜனாதிபதி, பிற்பகல் 1.15 மணியளவில் வாசித்து முடித்தார். சுமார் 2 மணிநேரம் 45 நிமிடங்கள் ஒரே தடவையில் வாசித்தார். அதன்பின்னர், பிற்பகல் 2 மணி வரையிலும் சபையமர்வு தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

## மரக்கறிகளின் விளைச்சல் குறைந்தது

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் மரக்கறிகளின் விளைச்சல் குறைவடைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

வடமாகாணத்திலிருந்து தம்புளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு கொண்டு வரப்படும் மரக்கறிகளின் அளவும் ஓரளவு குறைந்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மழைக் காரணமாக மரக்கறிகளின் விளைச்சல் குறைவடைந்தமையே இதற்கான காரணம் எனவும் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# புதுடெல்லியில்...

நடவடிக்கைகளைத் தடுக்கத் தவறிய மத்திய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம் பேருந்து நிலையம் முன் மாவட்ட தி.மு.க. சார்பில் ஞாயிற்றுக்கிழமை (16) ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

இதில் கட்சியின் துணைப் பொதுச் செயலரும், தமிழகத்தின் தூத்துக்குடி தொகுதி மக்களவை உறுப்பினருமான கனிமொழி பேசியுள்ளதாவது,

தமிழக மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண இதுவே கடைசிப் போராட்டமாக இருக்க வேண்டும். மத்திய அரசு கண்டுகொள்ளவில்லையென்றால், டெல்லியில் போராட்டம் நடத்துவோம்.

இரு நாடுகளிடையே மீன்பிடித் தொழிலில் பிரச்சினை உள்ள நாடுகள், சம்பந்தப்பட்ட இந்திய- இலங்கை மீனவர்களையும் அழைத்துப் பேசித் தீர்வு காணப்படுகிறது. ஆனால், இதே போன்ற சூழலை இந்திய - இலங்கை மீனவர்கள் பிரச்னையில் ஏற்படுத்த மத்திய பா.ஜ.க. அரசு முன்வரவில்லை.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரதமர் மோடியைச் சந்திக்கும் போபோதெல்லாம் தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

இதேபோல, தமிழகத்தைச் சேர்ந்த மக்களவை உறுப்பினர்களும் வலியுறுத்தி வருகிறோம். ஆனால், இந்திய மத்திய அரசு இதைக் கண்டுகொள்ளவில்லை.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட மாட்டார்கள் என கடல் தாமரைப் போராட்டம் நடத்தப்பட்டது.

ஆனால், தற்போது அவர்கள் ஆட்சியில்தான் தொடர்ந்து மீனவர்கள் கைது செய்யப்படுகின்றனர். நாட்டின் தன்மானத்தை, சுயமரியாதையைக்கூட பிரதமர் மோடியால் காப்பாற்ற முடியவில்லை.

# கூட்டணிகளுடன்...

கட்சியின் மத்தியக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது,

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கை தமிழரசு கட்சி தனித்துப் போட்டியிடுவதா? அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முந்தைய பங்காளி கட்சிகளுடன் ஒன்றிணைந்து போட்டியிடுவதா? என்பது தொடர்பில் சூழ்நிலைக்கு ஏற்ப தீர்மானம் எடுக்கப்படும்.

ஒவ்வொரு தேர்தல் முறைமையையும் அனுசரித்தே தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். தனித்துப் போட்டியிடுவது என்ற தீர்மானம் ஒற்றுமையாகவே எடுக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்துக்கமைய, தனித்த போட்டியிட்டால் தான் பின்னர் ஒன்றாக இணைந்து ஆட்சியமைக்க முடியும்.

எனவேதான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பங்காளிகளாக இருந்த கட்சிகளுடன் தேர்தலுக்கு முன்னதாக பேச்சுவார்த்தை நடத்தி, புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு மத்தியக் குழுக் கூட்டத்தின்போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், தொழில்நுட்ப ரீதியில் எந்தெந்த பகுதிகளில் தனித்துப் போட்டியிடுவது அல்லது இணைந்து போட்டியிடுவது என்பது தொடர்பில் சூழ்நிலைக்கு ஏற்ப தீர்மானம் எட்டப்படும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் ஆண்ட்ரூ பேட்ரிக்கை நாளை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இதன்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரக்கறிகளின் விளைச்சல்...

அத்துடன், திங்கட்கிழமை (17) நிலைவரப்படி, தம்புளை பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ பச்சை மிளகாய் 1,300 ரூபாய் முதல் 1,400 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், ஒரு கிலோகிராம் கெரட்டின் மொத்த விற்பனை விலை 900 ரூபாய் வரையில் உயர்ந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், கத்தரிக்காய் ஒரு கிலோ கிராம் 900 ரூபாவிற்கும், புடலங்காய் மற்றும் பீர்க்கங்களாய் ஒருகிலோகிராம் 200 ரூபாவிற்கும் அதிகளவில் விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “விமர்சிப்பவர்களுக்கு...

இதேவேளை, வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத அரசாங்கம், தம்மை விமர்சிக்கும் மக்களை அச்சுறுத்தி, அவர்களது வாய்களை மூடச் செய்வதற்கு தமது பிரதேச மட்ட பிரதிநிதிகளைக் களமிறக்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

களனி பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (16) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக சமூக ஊடகங்களில் பதிவிட்ட பதிவுகளை நீக்குமாறு யடவத்தை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் தமக்கு அழுத்தம் கொடுத்ததாகக் கூறி இளைஞர் ஒருவர் யடவத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளார். அதன்படி, இரு தரப்பினரையும் பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அந்த நபரின் வீட்டிற்கு வந்தபோது, அங்கிருந்த ஒருவர் இந்த சம்பவத்தை தமது கைப்பேசியில் பதிவு செய்திருந்த நிலையில் குறித்த காணொளி சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகிறது. தற்போதைய அரசாங்கம் என்னவாறான பொய்களை எல்லாம் கூற முடியுமோ அத்தனையையும் கூறி மக்களை ஏமாற்றியுள்ளது.

மாத்தளை மாவட்டத்தின் யடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் தமது கருத்துக்களை பேஸ்புக் ஊடாக வெளிப்படுத்திய போது அரசாங்கத்தையும், ஜே.வி.பியையும் சேர்ந்த ஒருவர், அவரின் வீட்டுக்கு சென்று அரசாங்கத்தை விமர்சிப்பதை நிறுத்துமாறு அழுத்தம் கொடுக்கிறார்.

சொன்னதைச் செய்ய முடியாமல் அரசாங்கத்தை விமர்சிக்கும் தரப்பினரை அச்சுறுத்துகிறார்கள்.

வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத வேளையில், பேச்சு சுதந்திரத்தை மறுக்கும் வகையில் வீடு வீடாகச் செல்லும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் தற்போது முன்னெடுத்து வருகின்றது. அரசியலமைப்பு பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தையும், தாம் விரும்பும் அரசியல் கருத்தைக் கொண்டிருப்பதற்கான சுதந்திரத்தையும் வழங்குகிறது.

# “இலஞ்சம் கொடுக்க...

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான முதலாவது வரவு- செலவுத்திட்டம், பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (17) நிதியமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் முடிவுரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில்,

இது ஒரு அமைச்சரவையின் அர்ப்பணிப்பு மற்றும் கூட்டு நடவடிக்கையிலிருந்து பிறந்ததாகும். அவர்களில் பெரும்பாலோர் ஒருபோதும் பாராளுமன்றத்தில் பணியாற்றியதில்லை, ஆனால் பரந்த அனுபவமும் நடைமுறை அறிவும் கொண்டவர்கள். நமது நாட்டின் விதியை வடிவமைப்பதில் இறுதியாகக் குரல் கொடுக்கும் பல அர்ப்பணிப்புள்ள மற்றும் அர்ப்பணிப்புள்ள சிவில் ஊழியர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களின் அனுபவத்திலிருந்து அவை பிறந்தன. மேலும், தங்கள் வாழ்க்கையில் தங்களை வேறுபடுத்திக் காட்டிய பல புகழ்பெற்ற, தேசபக்தி நிபுணர்களின் நம்பிக்கை மற்றும் தைரியத்திலிருந்து அவை பிறந்தன, மேலும் முதல் முறையாக உண்மையிலேயே தூய்மையான, செயல்பாட்டு மற்றும் இரக்கமுள்ள அரசாங்கத்திற்குப் பங்களிக்க முடியும் என்ற நம்பிக்கையைப் பெற்றிருந்தனர். இந்த அரசாங்கத்தின் பதவிகளைப் பார்த்தால், மிகவும் ஆர்வமுள்ள மற்றும் ஒழுக்கமான அரசியல்வாதிகள் சிலரையும், தங்கள் வாழ்க்கையை, தங்கள் குடும்பங்களுடனான நேரத்தையும், தங்கள் வணிக மரபுகளையும் கூட தங்கள் நாட்டை இலாபத்திற்கு மேலாகக் தியாகம் செய்த சில மிகவும் திறமையான கல்வியாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களின் கலவையையும் நீங்கள் காண்பீர்கள். ஒன்றாக, நாங்கள் ஒரு மகத்தான முயற்சியைத் தொடங்கியுள்ளோம். வாழ்க்கைச் செலவுகளைக் குறைத்துள்ளோம். நமது நீதி அமைப்பின் மீதான நம்பிக்கையை மீட்டெடுக்கத் தொடங்கியுள்ளோம். மேலும், முதல் முறையாக ஊழலை மட்டுமல்ல, அதிகாரத்தின் உயர் மட்டத்திலிருந்து ஊழல் தோன்றுவதையும் கூட நாங்கள் அகற்றியுள்ளோம்.

பல ஆண்டுகளாக, இலங்கையில் முதலீடு செய்யத் தூண்டப்பட்டவர்கள், எதையும் சாதிக்க முதலில் இடைத்தரகர்களிடம் முதலீடு செய்ய வேண்டும் என்பதைக் கண்டறிந்தனர். அந்த சகாப்தம் முடிந்துவிட்டது. இந்த அரசாங்கத்தில் தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட எந்த அதிகாரியும் தங்கள் வேலையைச் செய்ததற்காகவோ அல்லது செய்யாததற்காகவோ இலஞ்சம் அல்லது சலுகைகளை நாட மாட்டார்கள் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். இருப்பினும், நம்மில் யாராவது சட்டத்தை வளைக்கவோ அல்லது மீறவோ வாய்ப்பில்லாத சூழ்நிலையில், பொறுப்பானவர்கள் விசாரிக்கப்பட்டு சட்டத்தின் முழு அளவிற்கும் வழக்குத் தொடரப்படுவார்கள் என்று என்னால் உறுதியளிக்க முடியும். இந்த அரசாங்கம் அதன் அணிகளில் ஊழலை ஒருபோதும் பொறுத்துக்கொள்ளாது. இனி இலஞ்சம் கொடுக்கக் கேட்கப்படுபவர்கள் பயப்படத் தேவையில்லை. பணத்தை வாங்க முயற்சிப்பவர்கள்தான் பயப்பட வேண்டியவர்களாவர்.

எமது நீதித்துறை இதற்கு முன்பு ஒருபோதும் இவ்வளவு சுதந்திரமாகவோ அல்லது சுயாதீனமாகவோ இருந்ததில்லை. எமது பொலிஸ் படையணி இதற்கு முன்பு ஒருபோதும் இவ்வளவு அதிகாரம் பெற்றவர்களாகவோ அல்லது சுதந்திரமானவர்களாவோ இருந்ததில்லை. அவர்கள் அச்சமோ அல்லது சாதகமோ இல்லாமல் சட்டத்தை அமுல்படுத்துவார்கள். இருப்பினும், இலங்கையை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் வசிக்கும் பலர் ஊழலைத் தீர்ப்பது என்பது சட்டத்தை அமுல்படுத்துவதை விட கடினமானது என்பதை அறிவார்கள். இது அரசாங்கம் செயல்படும் விதத்தை நவீனமயமாக்குவது, அரச இயந்திரத்தை மிகவும் திறமையாகச் செயல்பட வைப்பது மற்றும் மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுவது பற்றியதாகும். இது இலஞ்சம் வாங்குவதை கடினமாக்குவதன் மூலமும், அவர்களுக்கு பணம் செலுத்துவது குறைவாக இருப்பதன் மூலமும் ஊழலின் மூல காரணத்தை நிவர்த்தி செய்யும்.

நவீன உலகத்துடன் இலங்கைக்கு இணையாக இதுபோன்ற ஒரு வாய்ப்பு இதற்கு முன்பு கிடைத்ததில்லை. சிங்கப்பூரின் ஸ்தாபக பிரதமர் லீ குவான் யூ, ஒரு காலத்தில் சிங்கப்பூர் இலங்கையின் உயரத்தை அடைய வேண்டும் என்று விரும்பிய கதையை நாம் அனைவரும் அறிவோம். இன்று, அனைவரின் எதிர்பார்ப்புகளையும் விஞ்சும் வகையில் ஒன்றுபட்ட இலங்கை, தூய்மையான இலங்கை, வளமான இலங்கை ஆகியவற்றுக்கான ஒரு வாய்ப்பை நான் காண்கிறேன். இலங்கை வேர்களைக் கொண்டவர்களான புலம்பெயர்ந்தோர்களே, நீங்கள் இலங்கையில் பிறந்திருந்தாலும் அல்லது உங்கள் பெற்றோரிடமிருந்து உங்கள் தாய்நாட்டைப் பற்றி கேள்விப்பட்டிருந்தாலும், எங்களுக்கு, நீங்கள் அனைவரும் இலங்கையர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். உங்கள் வெற்றியைப் பார்த்து உங்கள் நாடு பெருமையடைகிறது. எங்கள் தாய்நாட்டின் மீது நீங்கள் ஏன் நம்பிக்கை இழந்திருப்பீர்கள் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். உங்களில் யாராவது, தூரத்திலிருந்து கூட, எங்கள் நாட்டிற்கு உதவுவதற்கு எடுக்கும் ஒவ்வொரு முயற்சிக்கும் நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன் என்பதை அறிந்து கொள்ளுங்கள். இலங்கை எவ்வளவு மாறிவிட்டது என்பதை நீங்களே திரும்பி வந்து பார்ப்பதற்கு உங்களை அழைக்கிறேன். தனியார், பொது அல்லது இலாப நோக்கற்ற துறைகளில் இருந்தாலும், உங்கள் நிபுணத்துவம், உங்கள் திறமை மற்றும் உங்கள் முன்னோக்கு ஆகியவற்றை எங்கள் நாட்டிற்கு பங்களிப்பதற்காக நான் உங்களை அழைக்கிறேன். நாம் அனைவரும் சேர்ந்து மட்டுமே அடையக்கூடிய ஒரு வெற்றியை அடைவதற்கு, எங்களுடன் இணைந்து பணியாற்றுங்கள். நமது நாட்டை மீண்டும் கட்டியெழுப்பவும், நமது பிரஜைகளின் முழு திறனை அடைய ஒன்றிணைவதற்கும், ஒரு புதிய பாதையை வகுப்பதற்கும், நமது நாட்டு ஆண்களும் பெண்களும் கடந்த ஆண்டு வாக்களித்தனர். வரலாற்றில் முதல்முறையாக, வடக்கு முதல் தெற்கு வரை, கிழக்கு முதல் மேற்கு வரை உள்ள இலங்கை மக்கள் அனைவரும் ஒரு பொதுவான நோக்கத்தின் பின்னால் ஒன்றுபட்டுள்ளனர். மதம், இனம், பாலினம், வர்க்கம் மற்றும் வயது ஆகியன இனி ஒருபோதும் நம்மைப் பிரிக்காது. இலங்கை மக்களைப் பற்றி நான் உறுதியளிக்கக்கூடிய ஒரு விடயம் இதுதான்: மக்கள் மீண்டும் ஒருபோதும் ஒருவருக்கொருவர் எதிராகப் பிரிக்கப்பட மாட்டார்கள். தங்கள் சொந்த அரசியல் அல்லது தனிப்பட்ட இலாபத்திற்காக நம்மை ஒருவருக்கொருவர் எதிராகத் திருப்ப முயற்சிப்பவர்களால் மக்கள் மீண்டும் ஒருபோதும் ஏமாற்றப்பட மாட்டார்கள்.

தெரிவுசெய்யப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, நியமிக்கப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, இந்த அரசாங்கத்தின் பொதுநல ஆர்வமுள்ள ஒவ்வொரு உறுப்பினருக்காகவும், மாற்றத்தை ஏற்படுத்த எங்களுடன் இணைந்த ஆயிரக்கணக்கான கடின உழைப்பாளி, அர்ப்பணிப்புள்ள மற்றும் தேசபக்தி கொண்ட பொது ஊழியர்களுக்காகவும் நான் பேச முடியும் என்பத்தை நான் அறிவேன். நாங்கள் ஒருபோதும் சோர்வடைய மாட்டோம். நாங்கள் ஒருபோதும் தயங்க மாட்டோம். எங்கள் கொள்கைகளை நாங்கள் மீற மாட்டோம். நாங்கள் ஒருபோதும் உங்களை ஏமாற்ற மாட்டோம். நாங்கள் முன்மாதிரியாக வழிநடத்துவோம், அனைத்து இலங்கையர்களையும் ஒன்றாக உயர்த்துவோம். நாம் அனைவரும் ஒன்றாக செழிப்படைவோம். நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் பெருமைப்படுவோம், நாம் எமது வீடு என்று அழைக்கும் அழகான, புனிதமான நாட்டைப் பற்றியும் பெருமைப்படுவோம்.

அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக, வரவுசெலவுத் திட்டங்களை சரியான நேரத்தில் வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு, திறைசேரியில் உள்ள அதிகாரிகளிடமிருந்து மேலும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன் என்றார்.

# “மூடியே மறைத்து வீதி திறந்த பட்ஜெட்”

கருத்து தெரிவிக்கையிலேயே சிறீதரன் எம்.பி இவ்வாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

பழைய மொந்தையில் புதிய கள்ளு என்றுதான் இந்த வரவு -செலவுத் திட்டத்தை கூற வேண்டியுள்ளது. வடக்கிற்கு பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டாலும் அது வடக்கு மாகாண வீதிகளுக்கு என்று கூறப்பட்டுள்ளது. அத்துடன் பாதுகாப்புக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டுள்ளது என்று பகிரங்கமாக குறிப்பிடப்படவில்லை. எவ்வாறாயினும் கல்வி, சுகாதாரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை முன்மாதிரியானதே. புதிய அரசாங்கத்தால் முதலில் கொண்டுவரப்பட்ட வரவு செலவுத் திட்டமாக இது இருக்கின்றது.

இந்த நேரத்தில் இவர்களிடம் பிழை காண்பது எமது நோக்கமல்ல. எனினும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கூறாது புலம்பெயர்ந்தோரின் வேர்கள் இங்கே இருக்கின்றன என்று கூறுவது உண்மையான தமிழ் மக்களின் பிரச்சினை மறைக்கப்பட்டதை போன்றே உள்ளது. இது காலப்பொருத்தமானது அல்ல. பிரச்சினையொன்று உள்ளது என்று ஏற்றுக்கொள்ளும் தலைவர் வர வேண்டும். இதேவேளை இந்த வரவு-செலவுத் திட்டம் நாட்டின் வளர்ச்சிக்கானதாக இருந்தால் நாங்கள் அதற்கு ஆதரவளிக்க தயாராக இருக்கின்றோம். எனினும் பொறுத்திருந்து பார்ப்போம் என்றார்.

# இலங்கை தினம்

அதன் பிரகாரம், இனக்குழுக்களிடையே தேசிய நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காகவும், இலங்கையர்களாக செழித்து வளரவும் “தேசிய கலாச்சார பண்டிகையினை” ஆரம்பிப்பதற்கு நான் முன்மொழிகிறேன். நமது நாட்டிற்கு அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தரக்கூடிய டிசம்பரில் ஆரம்பித்து வைக்கப்படும். அதன் பிரகாரம், இந்த நோக்கத்திற்காக ரூபா 300 மில்லியன்களை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகிறேன்.

# ஜனாதிபதி அனுரவின் நகைச்சுவை பதில்கள்

இடையில், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ ஏதோ கூறினார். என்ன, ஹர்ஷ, நீங்கள் கேட்பதை நான் எப்படி கொடுப்பது.

உங்களுக்கு எப்படி கொழும்பு மாவட்ட அமைப்பாளர் பதவியைக் கொடுப்பது என ஜனாதிபதி கேட்டார். இதன்போது அவையிலிருந்த ஆளும் தரப்பினர் கெக் என சிரித்துவிட்டனர்.

தேங்காய் தொடர்பிலான யோசனையை ஜனாதிபதி முன்வைத்தபோது, எதிரணியில் சிரித்துவிட்டனர். எனினும், எந்த பதிலையும் தெரிவிக்காத ஜனாதிபதி, தேங்காய் தேவை தொடர்பிலான புள்ளிவிபரங்களை முன்வைத்தார்.

இதேவேளை, அனர்த்தத்தின் போது வழங்கப்படும் நட்டஈடு தொடர்பிலான அறிவிப்பின் போது, எதிர்க்கட்சியினரைப் பார்த்து, முன்னைய அரசாங்கம் போல, அமைச்சர்கள், ஆளும் கட்சியினருக்கு வீடுகள் எரிந்தமைக்காக கோடிக்கணக்கில் வழங்கப்படாது எனக்கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதியொதுக்கீடு தொடர்பிலான அறிவிப்பின் போது, தெரிந்தவர்களுக்கு அல்ல, கடிதம் கொண்டு வருவோருக்கு அல்ல, ஜனாதிபதி செயலகத்துக்கு வந்து சந்திப்போருக்கு அல்ல, பிரதேசத்தில் அபிவிருத்தி செய்ய நிதி ஒதுக்கப்படும் என்றார்.

# “கத்தியால் பால் கறக்க முயற்சி”

இறுதியில் மக்களால் பால் அருந்த முடியாது என்றும் அவர்களின் நாக்குகள் துண்டிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த ஆண்டு பட்ஜெட், ரணில் விக்ரமசிங்கே எடுத்த புதிய தாராளமயப் பாதையில் இலங்கையை மேலும் கொண்டு செல்லும் முயற்சி.

வரி வருவாய் உருவாக்கம் தொடர்பாக தனது கட்சி அரசாங்கத்திடம் 22 திட்டங்களை சமர்ப்பித்ததாகவும், அவை கருத்தில் கொள்ளப்படவில்லை.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பில்லியன் கணக்கான இலாபம் ஈட்டும் பில்லியனர்களிடமிருந்து சிறப்பு வரி வசூலிப்பதே தனது கட்சியின் முன்மொழிவுவாகும்.

அத்துடன், வரி செலுத்தாதவர்களிடமிருந்து வரி வசூலிக்கவும் தனது கட்சி முன்மொழிந்த்து.

வாகன இறக்குமதிக்கு வரி விதிப்பதன் மூலம் பணம் சம்பாதிப்பது தான் அரசாங்கத்தின் ஒரே நம்பிக்கை, ஆனால், அது வெற்றிகரமான முயற்சி அல்ல.

பொது நிறுவனங்கள் தொடர்பாக அரசாங்கம் முன்மொழிந்த சில விடயங்களை முந்தைய அரசாங்கத்தால் முயற்சித்து, ஆனால் மக்களின் எதிர்ப்பின் காரணமாக அவற்றைச் செய்ய முடியவில்லை.

இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டமானது ரணிலின் திட்டத்தின் தொடர்ச்சியாகும்.

அரசு ஊழியர்களின் சம்பளம் 15,000 ரூபாய் அதிகரிக்கப்படும் என்றும், ஆனால், அது மூன்று ஆண்டுகளாக அதிகரித்து வருவதாகவும், உண்மையான அதிகரிப்பு 8,250 ரூபாவாகும்

அரசு ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதன் மூலம் நெருக்கடி தீர்க்கப்படாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# இராதாவுக்கு ‘மகிழ்ச்சி’

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (17) தேசிய அரசின் 2025 ஆம் ஆண்டுக்கான கன்னி வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதி முன்வைத்த நிலையில் வரவு- செலவுத் திட்டம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், 2025 வரவு- செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட மக்களின் நாளாந்த சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிப்பதற்கு உறுதியளிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த காலங்களிலும் இவ்வாறு பல பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டன. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருந்தோட்ட மக்களின் சம்பள விவகாரத்தில் அதிகாரபூர்வமாக தீர்மானங்களை அறிவித்தார்.இருப்பினும் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. ஆகவே பரிந்துரைகள் நடைமுறைக்கு சாத்தியமாகுமா என்பதனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களே மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளன . பெருந்தோட்ட பகுதிகளில் வீடமைப்பு உட்கட்டமைப்புக்கு 4000 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி ஒதுக்கப்படுவதாக குறிப்பிடப்படுகிறது. பெருந்தோட்டத்துக்கு தனி வீடா, மாடி வீடா என்பது குறிப்பிடப்படவில்லை. பெருந்தோட்ட மக்களின் அடிப்படை பிரச்சினைகள் வரவு செலவுத் திட்டத்தில் விரிவாக குறிப்பிடப்படாமை கவலை இருப்பினும் வரவு செலவுத் திட்டத்தில் மலையகத் தமிழர்கள் என்று குறிப்பிட்டுள்ளமை மகிழ்ச்சி என்றார்.

# ஆத்ம ஞான பீடத்தில் மகா யாகம்











மாசி மாத பௌர்ணமி தினத்தையொட்டி, மண்டூர், பாலமுனை ஶ்ரீ ஆத்ம ஞான பீடத்தில் மகா யாகம் சிறப்பாக நடைபெற்றது.

ஆன்மீக ஜெகத்குரு மகாயோகி கே எஸ். புண்ணியரெத்தினம் சுவாமிகளினால் முறையே திருவிளக்கு பூஜை, காயத்திரி சித்தர் பகவான் ஆர்.கோ. முருகேசு சுவாமிகளின் தெய்வீக திருப்பாதங்களுக்கு குரு பாலாபிஷேகம், இவ்வுலகை ஆளும் ஷப்தரிஷிகள் 18 சித்தர்களை ஆவாகனம் செய்து 18 பூரண கலசங்கள் வைக்கப்பட்டு இந்தியாவிருந்து தருவிக்கப்பட்ட மிகச் சக்திவாய்ந்த காயகல்ப சஞ்ஜீவினி உயிர் ஜீவ மூலிகைகள் இடப்பட்டு சக்தி வாய்ந்த மகா மந்திரங்கள் பாராயணம் செய்யப்பட்டு மாசி மாத பௌர்ணமி உலக சேமத்திற்கான காயத்திரி மகா யாகம் மிகவும் பக்தி பூர்வமாக நிகழ்த்தப்பட்டது.

அதன் பின்னர் மகாயோகியினால் கூடியிருந்த பக்தர்களுக்குச் சக்தி வாய்ந்த ஆன்மீக அருள்ஞான உபதேசம் நிகழ்த்தப்பட்டு அன்னதானமும் அருளாசிகளும் வழங்கப்பட்டது.

- வி.ரி.சகாதேவராஜா





# "தொப்புள் கொடி உறவாகவே இருந்தாலும் எல்லை மீற வேண்டாம்"

■ நிதர்ஷன் வினோத்



இந்தியக் கடற்பரப்பிற்குள் யாரும் அத்துமீறினால் நீங்கள் என்ன செய்வீர்களோ அதனையே நாங்களும் செய்கிறோம். தொப்புள் கொடி உறவுகளாக இருக்கிற தமிழக மீனவர்களை நாங்கள் திட்டமிட்டு கைது செய்யவில்லை என இலங்கை கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

"இலங்கை கடற்பரப்பில் இலங்கை மீனவர்களுக்குப் பெரிய சவாலாக இருப்பது இந்திய மீனவர்கள் தான். அதாவது இந்திய மீனவர்களின் தொடரும் அத்துமீறல்களினால் தான் எமது மீனவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

உண்மையான நிலைமைகள் இவ்வாறிருக்கின்ற போது இந்தியாவில் எமக்கு எதிராகக் கண்டனப் பேரணி நடத்துகின்றனர். அந்தப் பேரணியில் தமிழகத்தின் கனிமொழி உள்ளிட்ட அரசியல் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டிருக்கின்றனர்.

ஆகையால் கனிமொழி உள்ளிட்டவர்களிடம் நாங்கள் வினயமாகக் கேட்டுக் கொள்வது, உங்களுடைய நாட்டுப் படகுகள் உங்கள் எல்லையை மீற வேண்டாம் என்று முதலில் சொல்லுங்கள்.

மேலும் கனிமொழிக்கும் அமைச்சருக்கும் நாங்கள் சொல்ல வேண்டியது வேறு ஏதுமில்லை. நாங்கள் தொப்புள் கொடி உறவுகள் தான். எனினும் தொப்புள் கொடியாக இருந்தாலும் எங்கள் கடலுக்கு வந்து எங்கள் மீன்களைப் பிடிக்க வேண்டாம். எங்கள் வளத்தை அழிக்க வேண்டாம் என்று தான் நாங்கள் கேட்கிறோம்.

அதே நேரத்தில் இந்திய மீனவர்கள் யாரும் இங்கு வெறுமனே கைது செய்யப்படவில்லை. உங்கள் கடல் எல்லையைத் தாண்டி எமது கடல் எல்லைக்கு வருகிற போதே நாங்கள் நடவடிக்கை எடுக்கின்றோம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் கடல் எல்லைக்குள் யாரும் வருகின்ற போது நீங்கள் எத்தகைய கடுமையான நடவடிக்கை எடுக்கிறீர்களோ அதேபோல் எங்கள் கடல் எல்லைக்குள் அத்துமீறி வருகிற போது நாங்களும் நடவடிக்கை எடுக்கிறோம்.

அதாவது எமது கடல் எல்லைக்குள் யாரும் நுழைகிற போது கடற்படையினர் கைது செய்கின்றனர். இவ்வாறு கைது செய்பவர்களை நீதிமன்றத்தில் கடற்தொழில் திணைக்களத்திடம் ஒப்படைத்து நீதிமன்றில் பாரப்படுத்துகிற போது, நீதி மன்றமே தீர்ப்பை வழங்குகிறது.

குறிப்பாக கடந்த 30 வருடங்களாக யுத்தத்திற்கு முகங்கொடுத்த மக்கள் இப்போது தான் ஓரளவிற்குத் தலைதூக்கிக் கொண்டு வருகின்றனர்.

ஆனால் அந்த மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையில் உங்களது ஆயிரக்கணக்கான படகுகள் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி எமது கடல் வளத்தை நாசமாக்கிச் செல்கின்றனர்.

இதனால் எமது மீனவர்கள் பல்வேறு பாதிப்புகளை எதிர் கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது. எனவே, எமது கடல் பரப்பிற்குள் அத்துமீற வேண்டாம்" என தெரிவித்துள்ளதுடன், இந்திய மீனவர்களுக்கு முதலில் கூறி அத்துமீறுவதைத் தடுத்து நிறுத்துங்கள் எனவும் இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



## வாகன விபத்தில் 12 பேர் காயம்

ஆடைத் தொழிற்சாலையொன்றின் ஊழியர்களை ஏற்றிச் சென்ற வேன், கந்தகெட்டிய - போப்பிட்டிய வீதியில் வைத்து கந்தகெட்டியவிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த பேருந்தொன்றுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 12 பேர் காயமடைந்துள்ள சம்பவம் திங்கட்கிழமை (17) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் 8 பெண்கள் உட்பட 12 பேர் காயமடைந்துள்ளதுடன் அவர்கள் மஹியங்கனை மற்றும் கண்டகெட்டிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் கந்தகெட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## சிவனொளிபாத மலைக்கு சென்ற பெண் மரணம்

பாணந்துறை பகுதியில் இருந்து சிவனொளிபாத மலைக்குத் தரிசனம் செய்வதற்கு சென்ற பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய தீபாணி ஹேமமாலி என்ற பெண் நல்லதண்ணி வாகனம் நிறுத்தும் பகுதியில் வைத்து ஏற்பட்ட கடும் சுகவீனம் காரணமாக அம்பியூலன்ஸ் மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை (16) இரவு உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.



## மின்சாரம் தாக்கி சிறுவன் மரணம்

■ பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் - வேலணை, செட்டிபுலம் பகுதியைச் சேர்ந்த 9 வயது சிறுவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

வேலணை, செட்டிபுலம் முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த 9 வயதுடைய சந்திரகாசன் கனிஸ்டன் என்பவரே இவ்வாறு ஞாயிற்றுக்கிழமை (16) அன்று உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் தாயார் உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்த நிலையில் வீட்டில் தனிமையிலிருந்த சிறுவன் தொலைக்காட்சியைப் பார்ப்பதற்காக மின் இணைப்பை ஏற்படுத்த முற்பட்ட போது, இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வீட்டுக்கு உறவினர்கள் வந்ததையடுத்து சம்பவத்தை அவதானித்து சிறுவனைச் சிகிச்சைக்காக வேலணை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளதுடன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே சிறுவன் உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை தகவல்கள் கூறுகின்றன.

சிறுவனின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கல்சியம் நீக்கியை அருந்தியவர் சிகிச்சை பலனின்றி மரணம்

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் கல்சியம் நீக்கியை அருந்தியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

திருநெல்வேலி பகுதியைச் சேர்ந்த தாசன் மைக்கல் (வயது 85) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குடிநீர் என நினைத்து கல்சியம் நீக்கியைத் தவறுதலாக அருந்தி விட்டதாக வெள்ளிக்கிழமை (14) அன்று சிகிச்சைக்காக யாழ் . போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த குறித்த நபர் சனிக்கிழமை (15) அன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## ஏழு கால்நடைகள் திடீரென உயிரிழப்பு

■ பி.கேதீஸ்

தலவாக்கலை ஹொலிரூட் ரத்னில்கல வீடமைப்பு திட்டத்திலுள்ள கால்நடை பண்ணையொன்றில் 7 ஆடுகள் மற்றும் ஒரு வளர்ப்பு நாயொன்று திடீரென உயிரிழந்த சம்பவம் தொடர்பில் தலவாக்கலை கால்நடை வைத்திய அலுவலகம் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (16) அன்று தனது பண்ணையில் நான்கு ஆடுகள் உயிரிழந்ததாகவும், திங்கட்கிழமை(17) அன்று மேலும் மூன்று ஆடுகள் உயிரிழந்துள்ளதாகவும் குறித்த பண்ணையின் உரிமையாளரான றொபர்ட் தெரிவித்தார்.

பண்ணையின் பின்பகுதி இடிக்கப்பட்டுள்ளதாகவும்,



சில குழுவினரோ அல்லது நபர்களோ கால்நடைகளுக்கு விஷத்தைக் கொடுத்திருக்கலாம் என சந்தேகிப்பதாகவும் பண்ணையின் உரிமையாளர் தெரிவிக்கின்றார்.

இவ்வாறு உயிரிழந்த மூன்று ஆடுகள் திங்கட்கிழமை (17) அன்று பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அதன் உடல் பாகங்கள் மேலதிக விசாரணைக்காக நுவரெலியா மற்றும் பேராதனை கால்நடை மருத்துவப் பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை கால்நடை வைத்திய அலுவலகத்தின் கால்நடை வைத்திய அதிகாரி சுரேஷ் குமார் தெரிவித்தார்.

பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் தேவை ஏற்படின் கால்நடைகளின் சம்பந்தப்பட்ட பகுதிகளிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளை மேலதிக பரிசோதனைகளுக்காக அரச இரசாயன பரிசோதனைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கால்நடை வைத்திய அதிகாரி சுரேஷ்குமார் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## கர்நாடக இசைக் கலைஞர் அருந்ததி ஶ்ரீரங்கநாதன் காலமானார்

இலங்கையின் இசை ஆளுமையான 'கலாசூரி' 'தேச நேத்ரு' கலாநிதி அருந்ததி ஶ்ரீரங்கநாதன் திங்கட்கிழமை (17) அன்று அவுஸ்திரேலியாவில் காலமானார்.

அருந்ததி ஶ்ரீரங்கநாதன் பாடகி, சிறந்த ஒலிபரப்பாளர், வீணை ஆசிரியர், நடன நிகழ்ச்சிகளின் ஒழுங்கமைப்பாளர் என பல அடையாளங்களை கொண்டவர். இவர் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையின் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.



கொழும்பு பல்கலைக்கழகத்தில் பல ஆண்டுகளாக தமிழ், சிங்கள மாணவர்களுக்கு தென்னிந்திய இசை, கர்நாடக சங்கீதம், நாட்டியம் முதலிய கலைகளை கற்பித்து, ஆற்றல் மிகுந்த விரிவுரையாளராக வலம் வந்தவர். அதனால் இவரது பெயரிலேயே பல்கலைக்கழகத்தின் கட்புல, கலை, நாட்டிய, சங்கீத பீடத்துக்கான கட்டடமொன்று இயங்கி வருகின்றது.

அன்னாரின் மறைவு இலங்கையின் கலைத்துறையினருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதோடு, பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும்.

# தீ வைப்புக்கள் அனைத்தும் கொடூரமான குற்றங்கள்

மத்திய மலைநாட்டின் எல்லா பகுதியில் உள்ள பல மலைத்தொடர்களில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. சுற்றுச்சூழலில் நிலவும் கடுமையான வறட்சி மற்றும் கடுமையான சூரிய ஒளி காரணமாக சில நேரங்களில் காட்டுத்தீ தானாகவே ஏற்படும்.

இதற்கிடையில், மக்கள் காட்டில் தீ மூட்டி வருகின்றனர். மக்கள் ஏன் காடுகளுக்குத் தீ வைக்கிறார்கள்?

காடு எரிந்த பிறகு, அது அழிக்கப்பட்டு நிலம் கையகப்படுத்தப்படுகிறது. நெருப்பின் நோக்கம் இறைச்சியைப் பெறுவதாகும். ஒரு காட்டின் நான்கு பக்கங்களிலும் தீப்பிடித்தால், காட்டு விலங்குகள் தீயில் சிக்கி இறக்கின்றன. இல்லையெனில், மூன்று பக்கங்களிலும் காட்டில் தீ வைக்கப்படும்போது, உயிருக்கு பயந்து விலங்குகள், காட்டின் எரிக்கப்படாத பக்கத்தில் வெளியே வரத் தொடங்கும். இந்த விலங்குகள் பின்னர் கொல்லப்படுகின்றன.

இந்தத் தீ வைப்புக்கள் அனைத்தும் கொடூரமான குற்றங்கள். காட்டுத்தீயில் எரியும் ஒரு மரம் சில பல ஆண்டுகள் பழைமையானதாக இருக்கும். அதன்படி, பல ஆண்டுகளா வளர்ப்பு இயற்கையின் முயற்சிகள் சில நிமிடங்களில் நெருப்பால் சாம்பலாகின்றன. பிரச்சினைகளை அமைதியான வழிகளில் தீர்க்க வேண்டும்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் ஏற்பட்ட காட்டுத்தீயின் அழிவைப் பார்த்தோம். அமெரிக்காவில் குளிர்காலம் நெருங்கும்போது, மரங்களில் உள்ள இலைகள் உதிர்ந்து, காய்ந்து, மரக்கட்டைகளாக மாறும். இதற்கிடையில், யாரோ அல்லது ஏதோ ஒன்று, வேண்டுமென்றோ அல்லது தற்செயலாகவோ, காட்டிற்கு தீ வைக்கிறது. நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் அமெரிக்காவில் பலத்த காற்று வீசுவதால், நம்பமுடியாத சதவீதத்தில் காட்டுத்தீ எரிகிறது. அமெரிக்கா மரங்களின் நாடு. அதனால்தான் கலிபோர்னியா போன்ற மாநிலங்களில், வீடுகளின் அடித்தளம் மட்டுமே சீமெந்தால் ஆனது. மற்ற அனைத்தும் மரத்தால் செய்யப்பட்டவை. இதனால்தான் தீ விபத்து ஏற்படும்போது, வீடுகளும் விரைவாகத் தீப்பிடிக்கத் தொடங்குகின்றன.

மத்திய மலைநாட்டில் சமீபத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் அதிக சேதம் எல்லா பகுதியில் உள்ள மலைகளுக்கு ஏற்பட்டது. 20 ஏக்கர் பிரதான வன நிலம் அழிக்கப்பட்டது. இலங்கையில் கலிபோர்னியாவைப் போல, பெரிய காடுகள் இல்லை. இருந்த காடுகள் அனைத்தும் மர வியாபாரிகளாலும் அரசியல்வாதிகளாலும் வெட்டப்பட்டுள்ளன. எனவே, வனத்திற்கு தீ வைப்பவர்களைத் துரோகிகளாகக் கருதி கடுமையான தண்டனைகளை விதிப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். புதிய அரசாங்கம் இதுபோன்ற ஊழல் நடவடிக்கைகளை அனுமதிக்காது என்பதுதான் நமக்கு இருக்கும் ஒரே நிம்மதியாகும்.

நாடளாவிய ரீதியில் தற்போது வறட்சியான வானிலை நிலவுகின்றது. வெளியில் தலைகாட்ட முடியாதளவுக்கு சூரியன் சுட்டெரித்துக் கொண்டிருக்கின்றது. நீரேந்தும் பிரதேசங்களின் நீர்நிலைகள் வரண்டுவிட்டன. நீர்த்தேக்கங்களின் மட்டம் கிடுகிடுவெனக் குறைந்து விட்டது.

அதனை அண்டிய பகுதிகளில் மட்டுமன்றி, பரவலாகக் காடுகளும் பற்றைக்காடுகளும் காய்ந்துவிட்டன. இலையுதிர் காலம் போல, பெரும்பாலான மரங்கள், இலைகளின்றிக் காய்ந்து போய் நிற்கின்றன.

இதற்கிடையில், பற்றைக் காடுகளுக்கும் காடுகளுக்கும் தீ வைத்தல் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. அதில் வாழும் சின்னஞ்சிறிய உயிரினங்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இதேநிலைமை தொடருமாயின், குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் என்பதில் ஐயமே இல்லை.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

எவரையும் துச்சமாக நோக்காதீர்கள். அவர்கள் உங்களைவிட அறிவாளிகளாகவும் மேன்மைக்குரிய நபர்ககளாகவும் இருக்கலாம். உலகில் யாவரும் தேவைப்படும் நபர்கள் என எண்ணுங்கள். எவரையும் பேதத்துடன் பார்ப்பது நல்லதல்ல!

எந்த மனிதரிடமும் குறைகளைத்தேடுவது அநாகரிகமானது. முதலில் ஒவ்வொருவரும் தமது உண்மைநிலை எப்படியென மனச்சாட்சியுடன் பேசவேண்டும். நெஞ்சம் பொய் உரைக்காது.

இன்று வறுமை நிலையில் வாழ்க்கை இருக்கலாம். எதிர்காலத்தின் மாற்றத்தில், உயர்ந்த நிலையில் உள்ளவர்களாக மாறலாம்.

பூமி உங்களுக்கு மட்டுமானது இல்லை. வசதிகள் உள்ளவரே மனிதர்கள் என எண்ணி, சாதாரண மனிதர்களை வெறுப்புடன் நோக்கக்கூடாது.

உங்களை ஒருவர் நோக்கும் முறை தவறாக இருந்தால், அதை நீங்கள் ஏற்பீர்களா? எல்லோரையும் சந்தேகமாக நோக்குவது தேவையற்றது. யாவரும் எதிரிகளும் அல்ல!

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்

# விமர்சனங்களை சமாளிக்கக் கூடிய பட்ஜெட்

மொஹமட் பாதுஷா

முன்னொருபோதும் இல்லாத எதிர்பார்ப்புடன் கொண்டு வரப்பட்ட முன் அனுபவம் இல்லாத தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டு நிலைமைகளைச் சீர்செய்வதிலும் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிவர்த்தி செய்வதிலும் நடைமுறைச் சவால்களை எதிர்கொண்டுள்ளது. இந்தப் போக்கும், இதற்கு சில அரச தரப்பு எம்.பிக்கள் அளிக்கின்ற நகைப்பூட்டும் விளக்கங்களும் அரசாங்கத்தை மக்கள் விமர்சிக்கும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

இந்தப் பின்னணியிலேயே, 2025ஆம் ஆண்டுக்கான, இந்த அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத் திட்டம் திங்கட்கிழமை (17) பாராளுமன்றத்தில் நிதி அமைச்சரான ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக நோக்கினால், பல முக்கியமான நல்ல முன்மொழிவுகளை உள்ளடக்கிய ஒரு வரவு செலவுத் திட்டமாக இதனைக் குறிப்பிடலாம். குறிப்பாக, இலங்கையில் அண்மைக்காலங்களில் முன்வைக்கப்பட்ட பட்ஜெட்களில் ‘பெரிதாகக் கவனிப்பைப் பெறாத’ பல விடயங்களில் இந்த பட்ஜெட் கவனம் செலுத்தியுள்ளமை முக்கியமானது.

இலங்கை வரலாற்றில் ஒரு கறைபடிந்த வரலாறான, எரிக்கப்பட்ட யாழ் நூலகத்தை மேம்படுத்துவதற்காகப் பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல், சிறைச்சாலைக் கூடங்களில் இருக்கின்ற சிறுவர்கள் கைதிகளுடன் பேருந்துகளில் செல்லக் கூடாது என்பதற்காகத் தனியான வாகனங்கள் கொள்வனவு செய்ய நிதி ஒதுக்கீடு செய்தமை, அநாதைப் பிள்ளைகளுக்கான உதவிக் கொடுப்பனவு, வீடு வசதியில்லாத அனாதைகள் திருமணம் முடிக்கின்ற காலத்தில் வீடொன்றைக் கட்டுவதற்கு நிதி வசதி போன்ற முன்மொழிவுகள் இவ்வகைக்குள் உள்ளடக்கப்படலாம்.

இதற்கு மேலதிகமாக, அரச துறைக்கு சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளதுடன் தனியார்த் துறையினருக்கும் சம்பள அதிகரிப்பு முன்மொழியப்பட்டுள்ளது.

ஆரம்ப பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பல்வேறு விதமான கொடுப்பனவுகள் அதிகரிப்பு, முதியோர், ஊனமுற்றோருக்கான கொடுப்பனவு, சுகாதார, கல்வித் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு மற்றும் மலையக மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான பல முன்மொழிவுகள் என இன்னும் பல விடயங்களும் இந்த பட்ஜெட்டில் உள்ளன.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலில் மட்டுமன்றி, பாராளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெற்றதற்கு முழு முதற்காரணம் அனுரகுமார திசாநாயக்க என்ற தனியொரு அரசியல்வாதியாவார். அவரது தெளிவான உரைகளும், மக்களை ஆகர்ஷிக்கும் இயல்பான ஆற்றலுமே இந்த பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்தது.

காலகாலமாக கோலோச்சிய ஜே.வி.பியினர், என்.பி.பியில் எம்.பியாக தெரிவு செய்யப்பட்டுள்ள புதுமுகங்களும் இந்த வெற்றியில் ஆற்றிய பங்கு மிகச் சிறியதாகும். அந்த வகையில், ஜனாதிபதி அனுரவின் தலைமைத்துவத்தில்தான் மக்கள் அதீத நம்பிக்கை வைத்துள்ளார்கள். இதற்கு முன்னைய ஆட்சியாளர்கள் மீது வைத்த எதிர்பார்ப்பை விட அதிகமாகும்.

ஏனென்றால், “நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இதனைச் செய்வோம், அதனை மாற்றுவோம்’ என்று கூறியதும், முன்னைய ஆட்சியாளர்களை விமர்சித்து அதற்கு எதிராக மக்கள் ஆணையைக் கோரியதும் அனுரகுமாரவும் என்.பி.பியின் முக்கிய ஓரிரு அரசியல்வாதிகளும்தான். எனவே, அந்த வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று மக்கள் நினைக்கின்றனர்.

ஆனால், அரிசி, தேங்காய், முட்டை, உப்பு என பல அத்தியாவசியப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்த்து வைப்பதில் கூட அரசாங்கம் தடுமாறுவதைக் காண முடிகின்றது. அறுதிப் பெரும்பான்மையுடனும், பட்டம் பெற்ற எம்.பிக்களுடனும் ஆட்சியமைத்த கட்சி முன் அனுபவம் இல்லாமல் தடுமாறுகின்றதா? அல்லது புதுமுகங்களுக்கு நடைமுறைச் சிக்கல்களுடன் பரீட்சயமில்லையா? எனப் பல கேள்விகள் மக்கள் மனதில் எழுந்துள்ளன.

இது ஒருபுறமிருக்க, இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக சமூக மட்டத்தில் எழுந்த கேள்விகளுக்கு ஆளும் தரப்பு அரசியல்வாதிகள் அளித்த பதில்கள் பொறுப்பு வாய்ந்தவையாக, கனதியானவையாக, மக்கள் நம்பக் கூடியவையாக இருக்கவில்லை என்பது கண்கூடு. இவ்வாறான நகைப்பூட்டும் அறிக்கைகள் மக்களிடையே மேலும் விமர்சனத்தை ஏற்படுத்தியிருந்தன.

“செல்லப் பிராணிகளுக்கு அரிசி வழங்கப்படுவதும் அரிசி தட்டுப்பாட்டுக்குக் காரணம்” என்று ஒரு வியாக்கியானம் அளிக்கப்பட்டது. “குரங்குகள் குரும்பைகளை நாசமாக்குவதாலேயே தேங்காய்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக” ஒரு அரசியல்வாதி சொன்னார். “வீடுகளில் தேங்காய்ச் சம்பல் சாப்பிடுவதும் தேங்காய் தட்டுப்பாட்டுக்கு காரணம்” என இன்னுமொருவர் விளக்கமளித்தார்.

“சீன மக்கள் பாம்புகளையும் மரப் பட்டைகளையும் சாப்பிட்டு முன்னேறியதாக” ஒரு கதையை ஆளும் தரப்பு அரசியல்வாதி கூறினார். “கிராமத்தில் வாழும் அணில்கள் மற்றும் விலங்களின் காதல்” பற்றி ஒரு அரசியல்வாதி பேசியதாகக் கூறப்பட்டது. இப்படி இன்னும் எத்தனையோ கதைகள் சமூக வலைத்தளங்களில் மட்டுமல்ல தேநீர்க் கடைகளிலும் பேசுபொருளாகியிருந்ததை மறுக்க முடியாது.

இந்த அரசாங்கத்தில் படித்தவர்கள் எம்.பிக்களாக இருக்கின்றார்கள் என்று மக்கள் நம்பிக் கொண்டிருக்கின்றார்கள். பக்குவமான, ஆகவே, கனதியான பதில்களை மக்களுக்கு அளிக்க வேண்டிய இவர்கள் பத்தாம்பசலித்தனமான, சிறுபிள்ளைத்தனமான விளக்கங்களை கூறுவார்கள் என்பதை மக்கள் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

இது போதாது என்று, நாடு முழுக்க ஏற்பட்ட மின்சார தடைக்கு “மின்சாரக் கட்டமைப்பில் குரங்கு பாய்ந்ததுதான் காரணம்” என்ற தோரணையில் ஒரு விளக்கம் கூறப்பட்டது. இந்தக் கருத்துக்கள் அரசாங்கத்திற்கு உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் பெரும் தலை குனிவையும் தர்மசங்கடத்தையும் ஏற்படுத்தியது என்றுதான் கூற வேண்டும்.

ஏனென்றால், அரசியல்வாதிகள் ஒரு கருத்தைத் தெரிவிக்க முன்னர் அதனை யாருக்குக் கூறப் போகின்றோம்? அதனைச் செவிமடுப்பவர்கள் யார்? என்பதை முன்னறிந்து கவனமாகப் பேச வேண்டும். அந்த விடயத்தில் இவர்களுக்கு முன்னனுபவமும் கேள்வி ஞானமும் இல்லை என்பதையே மேற்படி அறிக்கைகள் உணர்த்தின.

ஒரு மூடிய அறையில் அல்லது ஆய்வு மாநாட்டில் கூறக் கூடிய காரணங்களை மக்கள் மத்தியில் கூறியதால் என்.பி.பியின் எம்.பிக்கள் பலர் பொதுவெளியில் வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக்கொண்டனர். இதனையடுத்து, இவ்விதம் கருத்துத் தெரிவிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி கடுந்தொனியில் கூறியிருப்பதாக அறிய வருகின்றது.

இப்படியாக, பொருளாதார நெருக்கடிகளை சரிப்படுத்துவதில் நடைமுறைசார் தாமதங்கள் ஏற்பட்டுள்ள நிலையில், சில எம்.பிக்கள் மக்களது விமர்சனங்களுக்குத் தீனி போட்டு வருகின்ற காலத்திலேயே அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த இருக்கின்றது. மாகாண சபைத் தேர்தல் பற்றியும் பேசுகின்றது.

எனவே, பெரும் எதிர்பார்ப்புடன் நிறுவப்பட்ட அரசாங்கம் சாதாரண மக்கள் உணரும் விதத்தில் இமாலய மாற்றங்கள், முன்னேற்றங்களைக் கொண்டு வராதிருக்கின்ற குறுகிய காலப் பகுதிக்குள் உள்ளூராட்சித் தேர்தல் வரப் போகின்றது என்பது ஒரு சவாலான கள நிலைமை என்பதை அரசியல் அறிந்தவர்கள் புரிவார்கள்.

புதிய அரசாங்கம் எதுவுமே செய்யவில்லை என்று கூற முடியாது. நீதித்துறை, சட்டம் ஒழுங்கு, அரச வீண் செலவுகள், அரசியல் அழுத்தங்கள், ஊழல் என பல விடயப் பரப்புக்களில் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. சில விடயங்களில் வழக்கமான ஆட்சியாளர்களைப் போலவே செயற்படுகின்றது.

ஆயினும், நாங்கள் உடனடியாக விலைகளைக் குறைப்போம், பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்துவோம், நீங்கள் நினைப்பதைச் சாத்தியப்படுத்துவோம் என்று ஏற்கனவே கண்டபடி வாக்குறுதி அளித்துவிட்டதால், அதனை நம்பியிருந்த மக்கள் இன்னும் முழுமையாகத் திருப்தியடையவில்லை. அதற்குக் காலம் எடுக்கலாம்.

இப்படியான சூழலில் தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதாயின், அரசாங்கம் ஏதாவது வெளிப்படையான நல்ல காரியங்களை மக்களுக்குச் செய்தாக வேண்டிய ஒரு மறைமுக நிர்ப்பந்தம் இருக்கின்றது. பட்ஜெட் என்பது அரசியல் அல்ல என்றாலும், அரசாங்கங்கள் தமது அரசியல் ஆளுகையின் சிறப்பை காண்பிப்பதற்கான கருவியாக பட்ஜெட்டை பயன்படுத்துவது வழக்கமானதே.

அந்த வகையில், தற்போது எழுந்துள்ள விமர்சனங்களை எதிர்த்து ஆடுவதற்கும், நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தலை நோக்கி நகர்வதற்கு முன்னர் மக்களுக்கு சில சலுகைகளை வழங்குவதற்கும் 2025ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்தை நிதியமைச்சரான ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க சிறப்பாகப் பயன்படுத்தியிருக்கின்றார் என்றும் கூறலாம். ஆனால் ஒன்று, கடந்த காலங்களிலும் அரசாங்கங்கள் இப்படி எத்தனையோ முன்மொழிவுகளைச் செய்தன, திட்டங்களை அறிவித்தன. ஆனால் கணிசமான திட்டங்கள் வெற்றிகரமாக உரிய மக்களைச் சென்றடையவில்லை.

எனவே, 2025ஆம் ஆண்டுக்காக அறிவிக்கப்பட்ட நல்ல திட்டங்களுக்கான நிதியைப் பெற்று, உரிய காலத்தில் ஒதுக்கீடு செய்து, வினைத்திறனான முறையில் மக்களுக்கு அவற்றின் நன்மைகள் சென்று சேர்வதை உறுதிப்படுத்துவது ஒட்டுமொத்த அரச இயந்திரத்தின் கடமையாகும்.

அதேபோல், வரவு - செலவுத் திட்ட விடயதானங்களுக்கு அப்பால், அரசாங்கம் வேறு விவகாரங்கள் தொடர்பில் சிறுபான்மை மக்களுக்கும் பெரும்பான்மையினருக்கும் வழங்கிய வாக்குறுதிகளையும் சமகாலத்தில் நிறைவேற்றியாக வேண்டும்.

## கடிதங்கள்

### “சிறுவர்களுக்கான வைத்திய சேவை பாதிப்பு”

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றிய சிறுவர்களுக்கான விசேட வைத்திய நிபுணர் எவ்வித முன் அறிவித்தலுமின்றி பணியில் இருந்து விலகியுள்ளமையினால், அப்பகுதி சிறார்களுக்கு உரிய முறையில் வைத்திய சேவையை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சிறார்களின் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான நோயாளர் விடுதி இலக்கம் 7இல் அனுமதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கான சிகிச்சைகள் தாமதமடைந்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனால் விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட தமது குழந்தைகளை யாழ்ப்பாணம் அல்லது வவுனியா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே, இந்த விடயத்தில் வடமாகாண ஆளுநர் உடனடியாக தலையிட்டுக் குறித்த வைத்திய நிபுணருக்கு பதிலாக ஒருவரை உடனடியாக நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

- எஸ்.ஆர்.லெம்பேட்



## ‘அஸ்வெசும’ நலன்களை அதிகரித்தல்

அரசாங்கம் சமூகப் பாதுகாப்பு நிகர செலவினத்தை 2025இல் 232.5 பில்லியன் ரூபாவாக உயர்த்தியுள்ளது.

மாதாந்த காசுக் கொடுப்பனவானது முறையே ரூபாய் 8,500 முதல் 10,000 ரூபாய் வரையும் 15,000 ரூபாய் முதல் 17,500 ரூபாய் வரையும் 2025 ஜனவரி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஏற்கெனவே அதிகரிக்கப்பட்டுள்ளது.

காசுக் கொடுப்பனவுகளுக்கான காலமானது 2025 மார்ச் 1இல் முடிவடைகின்றது. அக்காலத்தை 2025 ஏப்ரல் 30 வரை நீடிப்பதற்கு நாங்கள் முன்மொழிகிறோம்.

அஸ்வெசும இன்னொரு சந்தர்ப்பம் 2025 மே மாதத்தில் நிறைவு

## பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள மீளாய்வு

பிரதானமாகத் தேயிலை, இறப்பர், தெங்கு பெருந்தோடத்துறையில் ஏறக்குறைய 1.5 மில்லியன் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்களது வாழ்க்கைத்தரமானது மேலும் மேம்படுத்தப்பட வேண்டுமென அரசாங்கம் கருதுகிறது. பெருந்தோட்டத் துறையினை நோக்காக் கொண்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக அவர்களது நாளாந்த வேதனத்தை ரூபா 1,700 ரூபாவாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் உறுதியளிக்கிறது.

## கொடுப்பவை அதிகரித்தல்

சிறுநீரக நோயாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்த கொடுப்பனவுகளை 7,500 ரூபாவிலிருந்து 10,000 ரூபாவாகவும், முதியோருக்கான மாதாந்திர கொடுப்பனவுகளை ரூபா 3,000 ரூபாவிலிருந்து 5,000 ரூபாவாகவும் 2025 ஏப்ரல் முதல் அதிகரிக்க முன்மொழிவு

## தனியார் துறை சம்பள அதிகரிப்பு

தொழில் வழங்குநர் சங்கங்கள், தனியார்த் துறை தொழிலாளர்களின் தேசிய ஆகக் குறைந்த சம்பளத்தை 2025 ஏப்ரலில் 27,000 ரூபாவாவும் 2026இலிருந்து 30,000 ரூபாவாவும் அதிகரிக்க ஏற்கெனவே இணங்கியுள்ளன.

## சிரேஷ்ட பிரசைகளுக்கான விசேட வட்டி

சிரேஷ்டபிரஜைகளுக்கான விசேட வட்டித் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு முன்மொழிகின்றோம். இத் திட்டத்தின் கீழ் 60 வயதுக்கு மேற்பட்ட தனிப்பட்டவர்கள் ஒருமில்லியன் ரூபா வரையும் ஒருவருட நிலையான வைப்பிற்குச் சந்தையில் காணப்படும் வட்டி வீதத்திற்கு மேலதிகமாக 3 சதவீத மேலதிக வட்டி வீதத்திற்குத் தகுதி பெறுகின்றனர். சிரேஷ்ட பிரசைகளுக்கு 3 சதவீத மேலதிக மானிய வட்டியைப் பெற்றுக் கொடுத்து இத் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு 15,000 மில்லியன் ரூபாய் ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன். இத்திட்டம் 2025 ஜூலை மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

## பொதுத் துறை சம்பள அதிகரிப்பு

கடைசி சம்பள மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு சுமார் ஒரு தசாப்தம் முடிவடைந்துள்ள படியால் இது தொடர்பான சகல காரணிகளையும் முழுமையான முறையில் தீர்க்கமாக ஆராய்ந்து சம்பள கட்டமைப்பைத் திருத்தியமைப்பதற்கு உரிய காலம் இதுவாகும். வரவு-செலவுத் திட்டத்திற்கு அதிக சுமை ஏற்படுவதைத் தவிர்க்கும். அதேவேளை, திறமை மற்றும் திறன்மிக்க பணியாளர்களைக் கவர்ந்திழுக்க அரசாங்கத்திற்கு இயலக்கூடிய வகையில் அரச துறை பணியாளர்களுக்குக் கண்ணியமான வாழ்க்கைத் தரத்தை வழங்குவது அவசியமாகும்.

அதற்கிணங்க ஆகக் குறைந்த மாதாந்த அடிப்படை சம்பளம் ரூபா 24,250 இலிருந்து 40,000 ரூபாய் வரை 15,750 ரூபாவால் அதிகரிக்கப்படுகின்றது. தற்போதுள்ள இடைக்கால கொடுப்பனவு மற்றும் விசேட கொடுப்பனவு அடிப்படை சம்பளத்தினுள் உள்ளடக்கப்படுவதால் தேறிய சம்பளத்தின் ஆகக் குறைந்த நிகர அதிகரிப்பு 8,250 ரூபாவாகும். இது அரச துறையில் ஏற்றுக்கொள்ள தக்கதொரு சம்பள உயர்வை வழங்குமென நான் நம்புகிறேன்.

முன்மொழியப்பட்ட 15,750 ரூபாய் மாதாந்த அடிப்படை சம்பள அதிகரிப்பானது அதே அடிப்படையில், நீதிச் சேவை, அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள், பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் முப்படை அதிகாரிகள் ஆகியோருக்கு ஏற்புடையதாகும்.

15,750 ரூபாவாகக் குறைந்த மாதாந்த அடிப்படை சம்பள அதிகரிப்புக்கு மேலதிகமாக வருடாந்த சம்பள அதிகரிப்பின் பெறுமதியானது 80 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இதன் விளைவாக ஆகக் குறைந்த வருடாந்த சம்பள அதிகரிப்பு 250 ரூபாவில் இருந்து 450 ரூபாவாக அதிகரிக்கும். அனைத்து அரச ஊழியர்களினதும் வருடாந்த சம்பள ஏற்றம் மேற்கூறிய அதே சதவீதத்தால் அதிகரிக்கப்படல் வேண்டுமென முன்மொழியப்பட்டுள்ளது.

இச் சம்பள அதிகரிப்பின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் 325 ரூபாய் பில்லியனாகும். தற்போதைய அரசிறை வரையறைகளைக் கருத்திற்கொண்டு இச் சம்பள அதிகரிப்பானது கட்டங் கட்டமாக நடைமுறைப்படுத்தப்படும். மொத்த தேறிய சம்பள அதிகரிப்பில் 5,000 ரூபாய் மற்றும் மீதி தொகையில் 30 சத வீதம் 2025 ஏப்ரல் மாதத்திலிருந்து வழங்கப்படும். எஞ்சியுள்ள 70 சத வீதம் சமமான இரு பகுதிகளாக முறையே 2026 ஜனவரி மற்றும் 2027 ஜனவரியில் வழங்கப்படும்.

ஆகவே, இச் சம்பள அதிகரிப்பிற்காக 2025இல் 110 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்ய முன்மொழியப்பட்டுள்ளது. நாம் செலவின விளைவுகளைக் கவனமாக ஆராய்ந்து அதிகரிப்பானது எமது அரசிறை வரையறைகள் மற்றும் இலக்குகளினுள் உள்ளடக்கப்படலாம் என்பதை உறுதிப்படுத்தியுள்ளோம்.

இச் சம்பள அதிகரிப்பின் ஒரு அங்கமாக 2025.01.01ஆம் திகதி அல்லது அதன் பிறகு ஓய்வுபெறும் பணியாளர்களின் ஓய்வூதியமானது அவர்கள் முன்மொழியப்பட்டுள்ள 2025ஆம் ஆண்டு சம்பள திட்டத்தின் கீழ் இளைப்பாறுகை நன்மைகளைப் பெறக் கூடிய வகையில் இப்புதிய சம்பள கட்டமைப்பின் கீழ் கணக்கிடப்படும்.

அரச ஊழியர்களின் ஆகக் குறைந்த அடிப்படை சம்பளத்தின் அதிகரிப்பினை கருத்திற்கொண்டு அரச ஊழியர்களின் இடர் கடன் எல்லையானது தற்போதுள்ள ரூபா 250,000 இலிருந்து 400,000 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

## மாணவர் புலமைப்பரிசில்

தரம் 5 புலமைப்பரிசில் 1,500 ரூபாவாக அதிகரிப்பு, விளையாட்டு பாடசாலை மாணவர்கள் போஷாக்கான உணவுக்கான கொடுப்பனவு 10,000 ரூபாய் வரை அதிகரிப்பு, தொழிற்பயிற்சி மாணவர்களிற்கு மாதாந்தம் கொடுப்பனவு 5,000 ரூபாய் வரை அதிகரிப்பு மஹாபொல புலமைப்பரிசில் 7,500 ரூபாவாக அதிகரிப்பு, மாதாந்த உதவித் தொகை 6,500 ரூபாவாக அதிகரிப்பு, இவ்வனைத்து கொடுப்பனவுகளும் 2025 ஏப்ரல் முதல் அமுலுக்கு வரும்.

## மலையக தமிழ் மக்களுக்கு

மலையக தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

இலங்கை தேசத்தின் ஒரு அங்கமான மலையக மக்கள் நீண்ட காலமாக அதிக சிரமங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். இருப்பினும், இந்த சமூகத்தின் வாழ்வாதாரங்கள் இன்னும் ஒரு சிறந்த வாழ்க்கைக்கான தரத்திகை விடக் குறைவாகவே உள்ளது.

அதன்படி, பின்வரும் முன்னெடுப்புக்களை ஆதரிக்க 7,583 மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டினை நாம் முன்மொழிகிறோம்

i. பெருந்தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக 4,267 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ii. மலையக தமிழ் இளைஞர்களின் தொழில் பயிற்சி, வாழ்வாதார மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக 2,450 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

iii. மலையக தமிழ்ச் சமூகத்தின் பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் வகுப்பறைகளுக்கு 866 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வட்டுவாகல் பால நிர்மாணம்

வட்டுவாகல் பாலம் நந்திக்கடல் களப்பின் முகத்துவாரத்தில் முல்லைத்தீவு, புதுக்குடுயிருப்பு, யாழ்ப்பாணத்தை இணைக்கும் பிரதான வீதியில் அமைந்துள்ள ஒரு ஒடுங்கிய பாலமாகும். இது பயணிகளுக்கு ஆபத்தான மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே, முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தித் தேவைகளுக்கு ஏற்றவாறு ஒரு பாலத்தினை நிர்மாணிக்க நாம் முன்மொழிகிறோம். அதற்கிணங்க அக்கட்டுமான வேலைகளை ஆரம்பிக்க இந்த வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் 1,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யவும் முன்மொழிகிறோம்

## அரசதுறை ஓய்வூதியங்கள்

அரசதுறை ஓய்வூதியங்களைப் பெறுவோருக்கு உரித்தான சம்பளம் மற்றும் நன்மைகளைக் கருத்திற்கொண்டு 2020 ஜனவரி 01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதிய முரண்பாட்டினை தீர்க்கும் வகையில் 3,000 ரூபாய் மாதாந்த அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது.

2017.12.31 வரை ஓய்வுபெற்ற அனைத்து ஓய்வூதியம் பெறுபவர்களும் ஒரே சம்பள அளவுத் திட்டத்திலிருப்பதனால் 2020ஆம் ஆண்டுக்குரிய ஐந்தாம் கட்ட சம்பள அளவுத் திட்ட அடிப்படையில், 2016-2020 வரை ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதியங்களை மாத்திரம் திருத்துவதன் மூலம் ஓய்வூதிய முரண்பாடு ஒன்று தோற்றுவிக்கப்படும் என்பதை அவதானிக்கின்றேன்.

இப்பிரச்சனை நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருப்பதனால் தற்போதுள்ள மட்டுப்படுத்தப்பட்ட அரசிறை ஏற்பாடுகளுக்குள் கட்டம் கட்டமான விதத்தில் இது தீர்க்கப்பட வேண்டும் என்று நான் நம்புகின்றேன். 2020 ஜனவரி 01 இற்கு முன்னர் 3/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக 2020ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய சம்பள அளவுத்திட்டங்களுக்கு நேரொத்த விதத்தில் 3 கட்டங்களில் திருத்துவதற்கு நாம் முன்மொழிகின்றோம்.

முதலாவது கட்டமாக 2018 ஜனவரி 01ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற அனைத்து ஓய்வூதியம் பெறுபவர்களினதும் ஓய்வூதியங்கள் 3/2016ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் 2018ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய மூன்றாம் கட்ட சம்பள அளவுத் திட்டங்களுக்கு அமைவாகத் திருத்தம் செய்யப்படுவதுடன் 2025 யூலையிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். இக் கட்டத்திற்காக 2025 வரவு-செலவுத் திட்டத்தினூடாக 10,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்வதற்கு நாம் முன்மொழிகின்றோம்.

மேலும் சம்பள மாற்றத்தின் நான்காம் மற்றும் ஐந்தாம் கட்டங்களுடன் தொடர்புடைய ஓய்வூதிய மாற்றங்களை முறையே 2026 ஜூலை 2027 ஜூலை தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கும் நாம் முன்மொழிகின்றோம்.

# நிதி நிலை...

திறைசேரி உண்டியல் வீதம் 8.8% ஆகக் குறைவடைந்து,
பணவீக்கம் 2025 ஜனவரியில் 4.0% எதிர்மறையாகக் காணப்பட்டது.
அந்நிய செலாவணி இருப்பு 6.1 பில்இ அமெரிக்க டொலராக காணப்பட்டது.
ரூபாயின் மதிப்பு டொலருக்கு 300 ரூபாயாக வலுவடைந்தது.
2025இல் பொருளாதார வளர்ச்சி 5% ஆக இருக்கும்
மூலதனச் செலவினங்களுக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4% ஒதுக்கீடு

## 2025 வரவு-செலவுத் திட்ட கோட்பாடுகள்

i. பொருட்கள், சேவைகள் மற்றும் விவசாய உற்பத்தியின் விரிவாக்கம்.
ii. இந்த உற்பத்தி அனைத்து மக்களின் தீவிர ஈடுபாடு மற்றும் பங்கேற்புடன் நடைபெற வேண்டும்.
iii. இந்த உற்பத்தியின் பயன்களும் ஆதாயங்களும் சமூகம் முழுவதும் சமமாகப் பகிரப்பட வேண்டும்.

இதேபோல், பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கேள்விப் பக்கத்தில், அரசாங்கத்தின் கொள்கை நோக்கங்கள்;

i. அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளின் தொடர்ச்சியான விநியோகத்தை உறுதி செய்தல்.
ii. அத்தகைய பொருட்கள் மற்றும் சேவைகள் உண்மையான மற்றும் நியாயமான விலையில் வழங்கப்பட வேண்டும்.
iii. பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுக்கொள்ளத்தக்க தரத்தில் இருக்க வேண்டும்.

இந்த வழங்கல் மற்றும் கேள்வி நோக்கங்களை அடைவதற்கான வழிமுறையானது பின்வருவனவற்றின் இணைப்பாக இருக்கும்.

i. போட்டித் தன்மையினை சந்தையில், கேள்வி, நிரம்பர் மற்றும் விலைகள் ஆகியன போட்டித்தன்மையான சந்தை சக்திகளால் தீர்மானிக்கப்படுகின்றன.
ii. அரசாங்கம் ஒழுங்குபடுத்தல் நிறிவனங்கள் மூலம் சந்தைகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணித்தல் வேண்டும்.
iii. கேள்வி மற்றும் நிரம்பலில் அரசாங்கத்தின் தீவிர பங்கேற்பு.
iv. குறிப்பிட்ட துறைகளில் உற்பத்தியினை ஒருங்கிணைத்தல்.

## நடுத்தரகால பொருளாதார போக்கு

நடுத்தரகாலத்தில் 5 சதவீதம் மெய் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி.
பற்றாக்குறையினைக் கொண்ட தசாப்தத்தை முடிவு நாணயம் கணிசமான தலம்பலைக் கொண்ட உத்திகளையும் இனிமேலும் எதிர்கொள்ளாது.
2028 தொடக்கம் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் படிப்படியான அதிகரிப்புக்கு தயார். உலக வங்கி மதிப்பீடுகளின் பிரகாரம் நாட்டின் வறுமை வீதம் 2023இல் 25.9 சத வீதத்தையெட்டியுள்ளது.
2025 அளவில் தலைகீழாக மற்றமடையும்.

## பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி விரிவாக்கல்

தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டத்தை (2025-2029) உருவாக்கும்.
புதிய ஏற்றுமதி சந்தைகளைப் பயன்படுத்தப்படும்.
சந்தைகளை விரிவுபடுத்தப்படும்.
நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு வசதி செய்யப்படும்.

## முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வசதியளிப்பு

முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் மூலம் முன்னுரிமை.
உரிய திருத்தங்களுடன் மீளாய்வு செய்யும்.
அரசாங்கம் பயன்படுத்தப்படாத அரசுக்கு சொந்தமான காணிகள் குத்தகைக்கு வழங்கப்படும்.
பொருளாதார கொடுக்கள்வாங்கல் சட்டம் மீண்டும் திருத்தம் செய்யப்படும்.
முதலீட்டுப் பாதுகாப்பு சட்ட மூலமொன்று இயற்றப்படும்.
ஆதனங்களை பதிவுசெய்தல், வரிக் கொடுப்பனவுகளை எளிமைப்படுத்தல்,
வர்த்தக வசதிப்படுத்தல், ஒப்பந்தங்களை அமுல்படுத்தல்,
கடன் பெற்றுக்கொள்ளல்
அரச தனியார் பங்குடமைக்கான சட்ட மூலம் அறிமுகப்படுத்தப்படும்.

## கேந்திர முக்கியத்திலிருந்து அனுகூலமடைதல்

வர்த்தகம், தளவாடங்கள், நிதி சேவைகள் மற்றும் டிஜிட்டல் மேம்படுத்த ஏற்பாடு கிழக்கு மற்றும் மேற்கு கொள்கலன் முனையத் திட்டங்கள் நிறைவடைந்தவுடன், கொழும்பு துறைமுகத்தின் ஆற்றல் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கும்.
கொழும்பு வடக்கு துறைமுகம் இலங்கையின் துறைமுகங்களின் செயற்திறனை விரைவுபடுத்தும் கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்திக்கான ஆர்வத்தினை ஒரு மாதத்திற்குள் கோரப்படும்.
2030 இல் 70 சதவீதமாக மீள் புதுப்பிக்கத்தக்க மின் ஆற்றலை அடைந்து கொள்வதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.
நிறுவனமயப்பட்ட சிறுவர்கள் நீதிமன்றங்களுக்குச் சென்று திரும்புவதற்கான சிறுவர் நட்பு போக்குவரத்து அமைப்பை நிறுவுதல்
அனாதைச் சிறார்கள் மற்றும் இளைஞர்களின் சமூகப் பாதுகாப்பை மேம்படுத்தல்.

## ஒதுக்கீடுகள்

கெரவலப்பிட்டி சுங்க கண்காணிப்பு நிலையம்,புளூமெண்டல் சரக்கு போக்குவரத்துப் பூங்காவுக்கு 500 மில்லியன் ரூபாய்.
வெயாங்கொடையில் உள்ளக கொள்கலன் உலர் துறைமுகத்துக்கான ஆரம்பப் பணிகளுக்கு ரூபாய் 500 மில்லியன்
ட்ரக் நியமன முறைமை, இலத்திரனியல் சரக்கு கண்காணிப்பு முறைமைக்கு 500 மில்லியன் ரூபாய்
பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கான மேம்பட்ட ஸ்கேனிங் முறைமைக்கு 1,000 மில்லியன் ரூபாய்
டிஜிட்டல் பொருளாதார அபிவிருத்தியின் விரைவுபடுத்தலை வலுப்படுத்த 3,000 மில்லியன் ரூபாய்
சுற்றுலாத் துறையை மேம்படுத்த 2025 ஆம் ஆண்டிற்கு 500 மில்லியன் ரூபாய்
ஆராய்ச்சிகள் முடிவுகளை வர்த்தக மயப்படுத்துவதற்காக புதுமை நிதி ஒன்றினை உருவாக்க 1,000 மில்லியன் ரூபாய் கர்ப்பிணிகளுக்கான போஷாக்கு 7,500 மில்லியன் ரூபாய், திரிபோஷா சத்துணவுத் திட்டத்திற்காக ரூபாய் 5,000 மில்லியன்பெண்களைப் பாதுகாக்க 120 மில்லியன் ரூபாய், பெண்களை இலக்காகக் கொண்ட திட்டங்களுக்கு 720 மில்லியன் ரூபாய், லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு 200 மில்லியன் ரூபாய், பகல் நேரப் பராமரிப்பு நிலையமொன்றை உருவாக்க 250 மில்லியன் ரூபாய், பாடசாலை உட்கட்டமைப்பை மேம்படுத்த 2,500 மில்லியனரூபாய், பல்கலைக்கழகங்களின் தரத்தினை மேம்படுத்த 137,000 மில்லியன் ரூபாய், முன்பள்ளிச் சிறுவர்களுக்கான ஊட்டச்சத்து உணவுக்கு 1,000 மில்லியன் ரூபாய், குழந்தைப் பருவக் கல்வி நிலையம் நிர்மாணிக்க 120 மில்லியன் ரூபாய்.
பாடசாலைகளை இடமாற்ற ஒரு தேசிய திட்டத்தினை தயாரிக்க 500 மில்லியன் ரூபாய், விளையாட்டுப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக 500 மில்லியன் ரூபாய், சட்ட வலுவூட்டலை மேம்படுத்த 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
இளம் தொழில்முனைவோர் அபிவிருத்திக்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
2025-2026 ஆண்டு காலப்பகுதியில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ரூபாய் 2,500 மில்லியன் முதலீடு
2025 இல் நீர்ப்பாசனத் துறை அபிவிருத்திக்கான மொத்த முதலீடு 74,500 மில்லியன் ரூபாய் மதிப்பீடு, கறுவா மற்றும் பிற ஏற்றுமதிப் பயிர்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்துக்கு 250 மில்லியன் ரூபாய், 2024/25 பெரும் போகத்திலிருந்து ஒரு போதுமான ஆரோக்கியமான நெல் இருப்பை பராமரிப்பதற்கு 5,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு, தேர்ந்தெடுக்கப்பட்ட தானியங்கள் மற்றும் கிழங்கு பயிர்களின் உற்பத்தி 2025-27 ஆம் ஆண்டு நடுத்தர காலத்தில் 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
தென்னை நாற்றுகள் மற்றும் நில அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
நன்னீர் இறால் குஞ்சு பொரிப் பக்கங்களை நிறுவுவதற்கு 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
மாற்றுத்திறனாளிகள் பற்றிய விரிவான தரவுத்தளத்தை நிறுவ 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிச் சாதனங்களுக்கா 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
போதைப்பொருளிலிருந்து விடுதலை பெற்ற சமூகம் ஒன்றை உருவாக்க 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
சிறைக் கைதிகளுக்கு உரிய தொழிற் தகைமைச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொடுக்க இருக்கும் ஒதுக்கம் 100 மில்லியன் ரூபாவால் அதிகரிப்பு, 100 தாழ்தள பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக 3,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு பழைய ரயில் பயணிப் பெட்டிகளை மறுசீரமைக்க 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
காங்கேசன்துறை மாங்குளம், புத்தளம் மற்றும் காலி போன்ற இடங்களில் 5 கைத்தொழில் பூங்காக்களுக்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு, வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் இறப்பர் உற்பத்திக்காகத் தொழிற்பேட்டைக்கு 1,500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு,
கிளீன் ஸ்ரீலங்காவுக்கு 5000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு, காட்டு யானைகளின் தாக்குதல்களுக்கு உட்பட்டவர்களுக்கு நட்டஈடு கொடுப்பதற்காக 240 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு, யானை மனித மோதலை குறைப்பதற்காக மொத்தமாக 640 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு, வீடற்ற குடும்பங்களுக்கு அத்தியாவசிய நிவாரணங்களை வழங்குவதற்கும் 1,500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

## பாடசாலைகளின் நிலை


சிறுவர்கள் வசிக்கும் இடத்திலிருந்து அல்லது அவர்களின் பெற்றோர் தொழில் புரியும் இடத்திலிருந்து 3 கிலோமீட்டர் சுற்றளவில் ஆரம்பப் பாடசாலை ஒன்றினை அபிவிருத்தி செய்வதே அரசாங்கத்தின் கொள்கையாகும்.
நாடுபூராகவும் 10,126 அரச பாடசாலைகள் காணப்படுகின்றன.
3,946 ஆரம்பப் பாடசாலைகள்
சுமார் 634,094 சிறுவர்கள் கல்வி கற்கின்றனர். இவற்றில்
3,000 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் 100 இற்கு குறைவான மாணவர்கள்
1,471 பாடசாலைகளானது 50 இற்கும் குறைவான மாணவர்கள்

## ஸ்ரீலங்கன் விமான சேவையின் கடனுக்கான தீர்வு

ஸ்ரீலங்கன் விமான சேவையானது, பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தில் முன்னணி விமானச் சேவையை வழங்குநராகச் செயற்படுகின்றது. கடந்த அரசாங்கமானது அரச உடைமை தொழில் முயற்சிகளை விற்பனை செய்து தனியார் முதலீடுகளைக் கவருவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சியானது வெற்றியளிக்கவில்லை.
இச் சூழ்நிலையில், ஸ்ரீலங்கன் விமானச் சேவையானது கடன்பெற்றுள்ள வங்கிகளுடன் அரசாங்கமானது உடன்படிக்கையொன்றினைக் கைச்சாத்திட்டு 2025இல் கடன் மூலதன மீள் கொடுப்பனவுக்காக 10,000 மில்லியன் ரூபாவையும், வட்டிக் கொடுப்பனவுக்காக 10,000 மில்லியன் ரூபாவையும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இக்கடன்களானது அரசாங்கத்தினால் தீர்க்கப்பட்டவுடன் தொழிற்பாட்டு இலாபத்தன்மை உறுதி செய்வதற்கு ஸ்ரீலங்கன் விமானச் சேவை முழுமையாகப் பொறுப்பாகவிருக்கும். இந்நோக்கில் கம்பனியினால் புதிய நடுத்தர கால உபாயத் திட்டம் உருவாக்கப்பட்டு வருகின்றது. அதற்கமைய இந்நோக்கத்திற்காக 20,000 மில்லியன் ரூபாவையும் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

## பேருந்துத் துறை நவீனமயமாக்கல்

பொதுத்துறை போக்குவரத்தை மேம்படுத்துவதற்கான ஆரம்பக் கட்டமாக முன்னோடி அடிப்படையில், தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட நவீன மற்றும் வசதியான பேருந்துகளின் தொகுதி அறிமுகப்படுத்தப்படும். அதன்படி, கொழும்பு பெருநகரப் பகுதிக்குள் மூன்று முக்கிய சாலை வழித்தடங்களில் 100 ஏர்-சஸ்பென்ஷன், தாழ்தள, வசதியான பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.



# குழந்தை பராமரிப்பு நிறுவனங்களை புதுப்பித்தல்

தற்போது, 379 சான்றளிக்கப்பட்ட பாடசாலைகள்/ தடுப்பு இல்லங்கள்/சிறுவர் இல்லங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 47 நிறுவனங்கள் அரசாங்கத்தால் இயக்கப்படுகின்றன. இந்த இல்லங்களில் வசதிகள் மிகக் குறைவாக உள்ளன, மேலும், சில இடங்களில் பாதுகாப்பு போதுமானதாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். சில கட்டிடங்களுக்கு பழுதுபார்ப்பு தேவைப்படுகிறது, மேலும் சில மாவட்டங்களிலுள்ள கட்டிடங்களில் போதிய இடம் இல்லை.

எனவே, பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்தியை மேம்படுத்தி சிறுவர் பராமரிப்பு மையங்களின் திறனை மேம்படுத்துவதற்காக ரூ.500 மில்லியன் ஒதுக்கீடு

# அநாதைச் சிறார்களுக்கு பாதுகாப்பு

நிறுவகப்படுத்தப்பட்ட சிறுவர்கள், மற்றும் அநாதைகளுக்கு ரூ.5,000 மாதாந்த கொடுப்பனவாக வழங்கப்படும். இதில் ரூ.2,000 சிறுவரின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படுவதோடு மீதி ரூ.3,000 ஆனது சிறார்களின் செலவுகளுக்காக அரசாங்கத்தின் கண்காணிப்பின் கீழ் சிறார்களின் சட்டப்படியான பாதுகாவலருக்கு பெற்றுக் கொடுக்கப்படும். இதற்காக 2025 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.1,000 மில்லியன் ஒதுக்கப்படுகின்றது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் வீடு மற்றும் பாதுகாப்புடன் தமது வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு உதவி செய்ய கூடிய குடும்ப பின்புலம் அல்லது ஆதரவு முறைமையற்றவர்களாகக் காணப்படுகின்றனர். ஆதலால் இவ் நலிவடைந்த சமூகத்தினர் வீடுவாங்குவதற்கு முடியாமையினால் திருமணங்களை காலம் தாழ்த்துகின்றனர். இது அவர்களை சமூக அழுத்தம் மற்றும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கு இட்டுச் செல்கின்றது. யதார்த்தத்தைக் கருத்திற்கொண்டு அவர்கள் ஒரு நிலையான வீட்டைக் கற்றுக்கொள்வதற்கு ஒரு மில்லியன் ரூபா வீட்டு மானியம் பெற்றுக் கொடுப்பதற்கு முன்மொழிகிறேன். இதை அமுல்படுத்துவதற்கு 2025 வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்கமானது ரூ.1,000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறுவர் கவனிப்பு விடுதிகள் மற்றும் அரசாங்க புனர்வாழ்வு நிலையங்களில் உள்ள சிறார்களை அண்மிய தேசிய பாடசலைகள் அல்லது மாகாண பாடசாலைகளில் சேர்த்து முறையான கல்வியை பெற்றுக் கொடுப்பதற்கான சந்தர்ப்பங்களில் உதவி செய்தல்.

புனர்வாழ்வு மையங்களில் புனர்வாழ்வளிக்கப்படும் இளைஞர்களுக்கு தேசிய தொழில் தகைமை மட்டம் 3 அல்லது 4 சான்றிதழ்களைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையில் தரமான தொழில்/திறன் பயிற்சிகளைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய புனர்வாழ்வளிப்பு முறையியல்களை பின்பற்றுதல் இதன் மூலம் அவர்கள் விடுதலை பெறும் போது தொழில் வல்லமையுடன் அல்லது வாழ்வாதாரத்துடன் சமூகத்தில் நல்லவர்களாக மற்றும் திறனான பிரசைகளாக சேர்க்கப்படுவர். இவர்கள் சமூகத்தில் புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் என்ற காரணத்தினால் பின்தள்ளப்படாமல் பொருத்தமான தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் பொலிஸ்/கிராமசேவகர் நற்சான்றுதழ்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான முறையியலை அபிவிருத்தி செய்தல்.

நிறுவகப்படுத்தப்பட்ட சிறார்கள் அவர்களது 18 வயதின் பின்பு சமூகத்துடன் மீண்டும் இணைக்கப்படும் போது மற்றும் அவர்களின் திருமணத்தின்போது (விசேடமாக பெண்கள்) அரசாங்க வீட்டு உதவிகள், பயிற்சிகள் மற்றும் தொழில் வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுப்பதில் முன்னுரிமைகள் அளிக்கப்படும்.

நிறுவகப்படுத்தப்பட்ட சிறார்கள் 18 வயதை தாண்டிய பின்பும் சமுதாயத்தில் மீண்டும் சேர்த்துக் கொள்வதற்கு பொருத்தமான நிலையில் இல்லாதவர்கள் பல்வேறுபட்ட நபர்களினால் துஷ்பிரயோகத்திற்கு உட்படுவதை தவிர்க்கும் நோக்கில் அவர்கள் தொடர்ந்தும் அதே நிறுவகத்தில் வாழ்வதற்கு அனுமதி அளிக்கும் வகையில் சட்டமானது திருத்தப்படும்.

# பரந்தனில் கைத்தொழில் பேட்டை

இலங்கையின் பரந்தன் கனிம வளங்களுக்கு பெறுமதி சேர்ப்பு மற்றும் உள்நாட்டு உற்பத்திக்கு அத்தியாவசியமான கைத்தொழில் உள்ளீடுகளை வழங்கும் நோக்கத்துடன், அமிலங்கள் மற்றும் காரங்கள் உள்ளிட்ட இரசாயன பொருட்கள் உற்பத்திக்காக வட மாகாணத்தில் உள்ள பரந்தனில் ஒரு கைத்தொழில் பேட்டையை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.



# தேங்காய் விபரம்

தெங்குப் பொருட்களுக்கான உலகளாவிய தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மேலும் இத் தொழிற்றுறையால் கணிக்கப்பட்டவாறு,

2030இல் 4,500 மில்லியன் தேங்காய்கள் தேவை

வீட்டு நுகர்வுக்கு 1,800 மில்லியன் தேங்காய்கள்

2,700 மில்லியன் தேங்காய்கள் தொழிற்றுறை நோக்கம்

# அனர்த்த நிவாரணம்

அனர்த்தங்களினால் உயிரிழந்தவர்களுக்கும் நிரந்தர ஊனமுற்றவர்களுக்கும் இழப்பீடாக தற்போது ரூ.250,000 வழங்கப்படுகின்றது. அதன்படி, இயற்கை பேரழிவுகள் மற்றும் வனவிலங்குகளால் ஏற்படும் சேதங்கள் உட்பட அனைத்து காரணிகளாலும் ஏற்படும் மரணம் அல்லது நிரந்தர ஊனம் என்பவற்றுக்காக இந்த இழப்பீட்டுத் தொகையை ரூ.1,000,000 இனை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான குடியிருப்பு நிலையங்களுக்கு, இதுவரை இழப்பீடு வழங்கப்படாத சொத்து சேதங்களுக்காக ரூ.2.5 மில்லியன் இழப்பீடு ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# கிழக்கு மாகாண அபிவிருத்தி

கிழக்கு மாகாணம் பொருளாதார அபிவிருத்திக்கான பெரும் சாத்தியக்கூறுகளைக் கொண்ட மாகாணங்களில் ஒன்றாகும். எனவே, கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி, சுற்றுலா மற்றும் சமூக வலுவூட்டல் ஆகிய துறைகளில் முக்கியமாக கவனம் செலுத்தி, உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்கு ஆதரவளிக்கும் வகையில், இந்திய பல்துறை மானிய உதவியுடன் கிழக்கு மாகாணத்தில் விரிவான அபிவிருத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நாங்கள் முன்மொழிகிறோம்.

# தண்டனைக் கைதிகள்

நாடுபூராகவும் 37 சிறைச்சாலைகள் உள்ளன.

ஏறக்குறைய 30,000 சிறைக்கைதிகள் உள்ளனனர்

அவர்களில் 1/3 பகுதியினர் தண்டனைக் கைதிகள்

மற்றவர்கள் விளக்கமறியல் கைதிகள்

65 சதவீதமான சிறைக்கைதிகள் 40 வயதுக்குட்பட்டவர்கள் தங்களது வேலை செய்யும் வயதில் உச்சத்தில் உள்ளனர்.

# உள ஆரோக்கியம்

இளம் பருவத்தினரிடையே துரதிர்ஷ்டவசமான தற்கொலை சம்பவங்களை நாங்கள் அனுபவித்து வருகிறோம். இப் பிரச்சினையின் தீவிரத்தை சமூகப் பிரச்சினையொன்றாக அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே, மனநலப் பிரச்சினைகள் உள்ள நோயாளிகளுக்கு ஆலோசனை சேவைகளை வயது வந்தவர்களுக்கு சுகாதார அமைச்சினூடாகவும் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் விரிவுபடுத்தவும் வசதிகளை மேம்படுத்தவும் ரூ.250 மில்லியனை ஒதுக்கீடு

# பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

அரசியல்வாதிகளின் ஆதரவாளர்களை அரச துறையில் பணிக்கமர்த்தும் கடந்த கால நடைமுறையை நாம் ஒழித்துள்ளோம். அரசாங்கத்தின் தொலைநோக்கிற்கு இணங்க அரசியல் தலையீடின்றி தகைமைகள் மற்றும் திறன்களின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் இடமாற்றம் என்பன மேற்கொள்ளப்படும்.

கொவிட்-19 நோய்த்தொற்று, பொருளாதார வீழ்ச்சி மற்றும் அரசியல் உறுதியின்மை மூலம் தோற்றுவிக்கப்பட்ட சவால்கள் காரணமாக மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதில் அரச துறை சிரமப்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்வதற்கு இவ்வருடத்திலிருந்து கண்டிப்பாக பதவியணி வெற்றிடங்களுக்கு அமைவாக அத்தியவசிய அரசாங்கத் துறை பதவிகளுக்கு 30,000 ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான உபாய ரீதியான ஆட்சேர்ப்புத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் உறுதி பூண்டுள்ளோம். அதற்கமைய இந்நோக்கத்திற்காக 2025இல் ரூ.10,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகிறோம்.

# புத்தாண்டு காலத்தில் சலுகை விலை

அரசாங்கமானது சலுகை விலையிலான 'பருவகால உணவுப்பொருள்' பொதியை பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானித்துள்ளது. இதன் மூலம் அதிகரித்த வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான ஆதவு நடவடிக்கையாக தாங்கிக்கொள்ளக்கூடிய விலையில் அத்தியவசிய உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு வசதியளிக்கின்றது. எதிர்வரும் புத்தாண்டு காலத்தில் லங்கா சதோச நிறுவனத்தின் ஊடாக இதன் அடிப்படையில் அரிசி, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், பருப்பு,வெங்காயம், கிழங்கு மற்றும் கருவாடு உள்ளடங்கிய உலர் உணவுப்பொதியொன்றினைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்மொழியப்படுகின்றது. இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ரூ.1,000 மில்லியன் நிதி ஒதுக்கீடு

# யாழ். நூலகத்துக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாண நூலகம் யாழ்ப்பாணம் மற்றும் அயலிலுள்ள தீவுகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் உட்பட ஏராளமான வாசகர்கள் யாழ்ப்பாண நூலகத்தைப் பயன்படுத்துகின்றனர். இருப்பினும், இந்த வாசகர்களின் நலனுக்காக உட்கட்டமைப்பு போதுமான அளவு மேம்படுத்தப்படவில்லை. எனவே, இந்த நூலகத்திற்கு கணினிகள் மற்றும் பிற அத்தியாவசிய வசதிகளை வழங்க இந்த வரவுசெலவுத்திட்டத்தில் ரூ.100 மில்லியன் ஒதுக்கீடு. ஏனைய பிராந்திய நூலகங்களின் அபிவிருத்திக்காக இவ் வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் இன்னும் ரூ.200 மில்லியன் ஒதுக்கீடு

# முதலீட்டுகளுக்காக காணிகள் விடுவிப்பு

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை ஆகியவற்றால் நிர்வகிக்கப்பட்டு உற்பத்தி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாத நிலங்கள் அடையாளம் காணப்பட்டு நிலத்தின் பொருத்தப்பாட்டினை கருத்தில் கொண்டு விவசாய உற்பத்தி மற்றும் விவசாய அடிப்படையான அல்லது விவசாயம் அல்லா சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்காக தனியார்துறையின் முதலீட்டிற்காக விடுவிக்கப்படும். இது தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூ.250 மில்லியனை ஒதுக்கீடு

# வடமாகாணத்தில் உள்ள கிராமிய வீதிகள் மற்றும் பாலங்கள்

பிரதான அபிவிருத்தி நீரோட்டத்திலுருந்து வடமாகாணமானது பாரிய அளவில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதை நாம் அவதானிக்கலாம். எவ்வறாயினும், அது எமது பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய அளப்பரிய ஆற்றலை கொண்டுள்ளது. அதனடிப்படையில் அடிப்படை உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் கவனம் செலுத்தி வடமாகாணத்தில் கிராமிய வீதிகள் மற்றும் பாலங்களை மேம்படுத்துவதங்காக ரூ.5,000 ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.



புதுடெல்லி

புதுடெல்லியின் புதிய முதலமைச்சர யார்?

# இன்று முடிவாகும்

புதுடெல்லி சட்டசபை தேர்தலில், பா.ஜ.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ள நிலையில், செவ்வாய்க்கிழமை (18) புதிய முதலமைச்சர் யார் என முடிவு செய்யப்பட்டு 20ஆம் திகதி பதவி ஏற்பு விழா நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய முதலமைச்சர் முன்னாள் மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜின் மகள் பன்சூரி சுவராஜின் பெயர் ஏற்கெனவே அடிபட்டு வந்தது. ஆனால், அவர் தற்போது மக்களவை உறுப்பினராக இருக்கிறார். இதைப்போல கடந்த மக்களவைத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த ஸ்மிரிதி இராணி பெயரும் பேசப்படுகிறது.

இது தவிர, புதுடெல்லி தொகுதியில் முன்னாள் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலை தோற்கடித்த பர்வேஷ் வர்மாவின் பெயரும் பேசப்படுகிறது. இவர்கள் போக, டெல்லி பா.ஜனதா தலைவர் வீரேந்திர சத்சேபா மற்றும் மகளிர் அணி நிர்வாகி ரேகா குப்தா ஆகியோரது பெயர்களும் அடிபடுகின்றன.

இந்தியா

இந்தியாவில் ஒரே நாளில் இடம்பெற்ற

# இருவேறு நிலநடுக்கம்

இந்தியாவில் ஒரே நாளில் இரண்டு இடங்களில் நிலடுக்கம் ஏற்பட்டுள்ளது.

புதுடெல்லியில், திங்கட்கிழமை(17) காலை 5.36 மணியளவில், 4.0 ரிக்டர் அளவுகோலில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலநடுக்கம் புதுடெல்லியின் சுற்றுப்புறங்களிலும் உணரப்பட்டுள்ளது.


இதேபோன்று, புதுடெல்லியில் ரயில்வே நிலையத்தில் ரயிலுக்காக காத்திருந்த பயணிகளும் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாக ரயில் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு நிலநடுக்கம் ஏற்பட்டதும் அலறியடித்தபடி ஓடியுள்ளனர்.

ரயில் பயணிகளில் ஒருவர் கூறும்போது,

“நான் ரயிலுக்காக காத்திருந்தேன். அப்போது, கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது. இதனை உணர்ந்தேன். ரயில் நிலையத்துக்கு கீழே வேறு ஏதேனும் ரயில் செல்கிறதோ என்று அச்சமடைந்து விட்டேன்” என்றார்.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பொருளிழப்பு உள்ளிட்ட விவரங்கள் எதுவும் உடனடியாக வெளியாகவில்லை.



அமெரிக்கா

# சூறாவளியால் 9 பேர் பலி

அமெரிக்காவின் கென்டகியில் ஏற்பட்ட சூறாவளியில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது குறித்து, கென்டகி மாகாண ஆளுநர் ஆண்டி பெஷீர் கூறும்போது, “கடந்த 24 மணிநேரத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு உள்ளனர். மற்றவர்களை தேடும் மற்றும் மீட்கும் பணியும் நடந்து வருகிறது” என கூறியுள்ளார்.

மேலும், “சூறாவளி தாக்குதலால், டென்னஸ்ஸீ, கென்டகி மற்றும் விர்ஜீனியா உள்ளிட்ட பல்வேறு மாகாணங்களில் வெள்ளம் ஏற்பட்டு, வாகனங்கள் வெள்ள நீரில் மூழ்கி காணப்படுகின்றன. மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளன. வீடுகள், கட்டிடங்களை வெள்ள நீர் சூழ்ந்து காணப்படுகிறது. மக்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியாமல் தவித்து வருகின்றனர். “கென்டகி மாகாணத்தில், வரலாறு காணாத வகையில் வெள்ளம் எதிரொலியாக நீர் மட்டம் உயர்ந்து உள்ளது என அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

## இத்தாலிய சீரி ஏ தொடர்: நடப்புச் சம்பியன்களை

# வீழ்த்தியது ஜுவென்டஸ்



இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் திங்கட்கிழமை (17) அதிகாலை நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலனுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை பிரான்ஸிஸ்கோ கொன்ஸெய்யோ பெற்றிருந்தார்.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 56 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நாப்போலி உள்ளது. 54 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் இன்டரும், 51 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லாண்டாவும் காணப்படுகின்றன. ஜுவென்டஸ், லேஸியோ தலா 46 புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும் அவற்றுக்கிடையேயான போட்டி முடிவுகளின் முடிவில் நான்காம், ஐந்தாமிடங்களில் காணப்படுகின்றன.



புத்தளம் தம்பபன்னி பாடசாலையின்

# விளையாட்டு மைதானம் புனரமைப்பு

எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் தம்பபன்னி அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் விளையாட்டு மைதானம் பெற்றோர்களின் பங்களிப்புடன் செப்பனிடப்பட்டுள்ளது.

நீண்ட நாட்களாக சேறும் சகதியுமாக காணப்பட்ட புத்தளம் ஆப்தீன் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தை புனரமைப்பு செய்து தருமாறு பாடசாலையின் அதிபர் எம்.டி. எம். மனாஸின் வேண்டுகோளை அடுத்து பெற்றோர்களில் ஒருவரான மன்சூர் சஹ்பானின் முயற்சியால் கொழும்பு றொட்ரிக் கழகத்தின் நிதி உதவி ஊடாக 20 லோட் பொரல் வழங்கப்பட்டதுடன் அதனை செப்பனிடும் பனியை பெற்றோர்களான கபீர் ஜவாத் மற்றும் ஆரிப் ஆகியோருடன் பொறியியலாளர் எம்.எப். றின்ஸாத் அஹமட், சர்ராஜ் லாபிர் மற்றும் ஆசிரியர் சிபாக் முன்வந்தமை விஷேட அம்சமாகும்.

மேலும் இவ்வேலைத்திட்டங்களுக்கான முழுமையான ஆதரவு வழங்கிய புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஜே.எம். பைசல் மற்றும் மைதான புனரமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோர்களுக்கும் தமது பாடசாலையின் நிர்வாகத்தின் சார்பாக தமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் அதிபர் எம்.டி.எம் மனாஸ் தெரிவித்துள்ளார்.



இரண்டாவது போட்டியில்

# சிம்பாப்வேயை வென்ற அயர்லாந்து

ிம்பாப்வேக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், ஹராரேயில் ஞாயிற்றுக்கிழமை (16) நடைபெற்ற இரண்டாவது போட்டியில் அயர்லாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அயர்லாந்து

சிம்பாப்வே: 245/10 (49 ஓவ. ) (துடுப்பாட்டம்: வெஸ்லி மட்ஹெவரே 61 (70), சிகண்டர் ராசா 58 (75), வெலிங்டன் மஸகட்ஸா 35 (35), பிரயன் பென்னிட் 30 (34) ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்க் அடைர் 4/54, கேர்ட்டிஸ் கம்பர் 3/13, அன்டி மக்பிரயன் 1/36, கிரஹம் ஹூமெ 1/47, ஜொஷ் லிட்டில் 1/56)

அயர்லாந்து: 249/4 (48.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: போல் ஸ்டேர்லிங்க் 89 (102), கேர்ட்டிஸ் கம்பர் 63 (94), லொர்கன் டக்கர் ஆ.இ 36 (48), ஜோர்ஜ் டொக்ரல் ஆ.இ 20 (20) ஓட்டங்கள். பந்துவீச்சு: ட்ரெவர் குவான்டு 2/50, பிளஸிங்க் முஸர்பனி 1/51, றிச்சர்ட் நகரவா 1/53)

போட்டியின் நாயகன்: கேர்ட்டிஸ் கம்பர்

இத்தொடரின் முதலாவது போட்டியை சிம்பாப்வே வென்ற நிலையில், தீர்மானமிக்க மூன்றாவது போட்டியானது இன்று பிற்பகல் 1 மணிக்கு நடைபெறவுள்ளது.

# பெனால்டி முறையிலான தொடர்

எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் கால்பந்தாட்டக் கழகத்தின் ஏற்பாட்டில், லெஜன்ட்ஸ் கழகத்தின் பூரண அனுசரனையில் தற்போது நடைபெற்று வருகின்றன விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த இறுதிப் போட்டியைத் தொடர்ந்து தொடரில் பங்கேற்ற 12 அணிகளுக்கும் இடையே பெனால்டத் தொடர் ஒன்று நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விலகல் முறையிலான தொடரின் அதே ஆட்ட நிரலுக்கு ஏற்ப இத்தொடர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் முதலாம், இரண்டாம் இடங்களை பெறும் அணிகளுக்கு கிண்ணங்கள் வழங்கப்பட உள்ளன.

அதே போல இந்த விலகல் முறை தொடரில் பங்கேற்ற 12 அணிகளிலும் சிறப்பாக செயல்பட்ட ஒரு வீரர் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான கிண்ணமும் வழங்கப்படவுள்ளது.



# யுனைட்டெட்டை வென்ற டொட்டென்ஹாம்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (16) நடைபெற்ற மன்செஸ்டர் யுனைட்டெட்டுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் வென்றது.

டொட்டென்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜேம்ஸ் மடிஸன் பெற்றார்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 60 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் உள்ளது. 53 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 47 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நொட்டிங்ஹாம் பொரெஸ்டும், 44 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியும் காணப்படுகின்றன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 18, பெப்ரவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.